தென்மொழி

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை புவியில் எவரும் எதிர்நின்றே!

சுவடி-6: ஓலை-7

மடங்கல் தி. பி. ௧௯௯௯ (1968-செப்டம்பர்)
பொறுப்பாசிரியர்:-பெருஞ்சித்திரன்.
தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.

ஓ! மாணவச் செல்வரே!

ஓ!
மாணவச் செல்வரே! மாணவச் செல்வரே!
ஊணும் உறக்கமும் உயிர்ப்பும் தமிழ்க்கென
நாளும் எண்ணி எண்ணி நலிகையில்
நீளப் படர்ந்த என் நினைவுத் திரையினில்
முன்னுறத் தோன்றி, முகிழ்த்தபுன் நகையொடு
தோளும் உணர்வும் தூக்கித் துவளுறு
ஆண்மை தெறிக்க ஆர்க்கும் குரலினால்
"நாளைத் தமிழகம் நம்முடைத் தமிழகம்"
என்றுரை சாற்றிடும் இளைத்திடா உணர்வுசேர்
மாணவச் செல்வரே! மாணவச் செல்வரே!

இருள்நிறைந் திருக்கும் இற்றைத் தமிழகம்
அருள்நிறைந் திலங்கிய அன்றைய நிலம்போல்
ஒளிபெற விளங்கிட விரும்பும் உணர்வினால்
ஆயிரம் கோடிப் பணிகள் ஆற்றிடப்
பாயிரம் எழுதிப் படைத்திடு வோரே!
பொங்கும் உணர்வொடும் பூரித்த அன்பொடும்
உங்களுக் காக ஒன்றிரண் டுரைப்பேன்!

நீட்டிய செவிகளில் நிறுத்துக இவ்வுரை!
பூட்டிய நெஞ்சினிப் புலர்ந்தது காண்க!
அயர்வுற்ற தோளினி உயர்வுற்ற தென்க!
மயர்விலா அறிவும் மனமும் திறக்க!
எங்கணும் நல்லுணர் வேற்றம் பெறுக!
தங்கிய இருளெலாம் தகர்க்கப் படுக!

கற்ற கல்வியும் ஒழுங்கும் கால்கொள
நற்றவப் பயனால் நாட்டாண்மை செய்க!
தோளாண்மை பூண்டு குமுகாயத் தொண்டெனும்
வேளாண்மை செய்திட விரைந்திவண் வருக!
எத்தனை எத்தனை ஏற்றத் தாழ்வுகள்!
எத்தனை எத்தனை இழிசேர் குப்பைகள்!
செத்துக் கொண்டுள தமிழகச் சீர்மைகள்!
புத்துருக் கொண்(டு) அவை புதுக்கிடப் புகுக!

செந்தமிழ்ப் படையினை வடபடை வென்றது!
இந்த நொடியினில் ஏற்றம் பெறாதினி
எந்தக் காலத்து எழுவதோ? ஓர்மின்!

தமிழுக் குற்றது தமக்குற்ற தென்னும்
இமிழாக் கொள்கை எழுந்ததிங் கென்றால்,
அடிமை விலங்குகள் அறுக்கப் படாவா?
விடியாத் தமிழ்நிலம் விடிவுற் றெழாதா?
மடியினும் துயிலினும் மாண்டுகொண் டுள்ள
துடியாத் தமிழர்க்கு உணர்வுதோன் றாதா?

வானுற நின்று தோள்களை உயர்த்தி
வீணும் நினைவுகள் விட்டு விலகி

உலகினைக் காண்மின்! மாணவர் உலகமே!
பலகலைக் கல்வி, பலதொழில், அறிவியல்—
கலகல வெனப்பிறர் கற்பன காண்மின்!
தமிழகம் நாட்குநாள் தாழ்கின்ற தில்லையா?
உமிழத் தகும்படி உயர்வற் றோம்!காண்!
எழுதல் இயலுமா? எழுந்(து)அவர் போலும்
விழாமல் நடந்து வெற்றி பெறுவமா?
எண்ணத் தோன்றிட வில்லையா உமக்கே!
எண்ணி எண்ணி இளைப்புற வில்லையா?

இத்தகு நிலையில் என்செய் கின்றோம்!
மெத்தப் பழம்புகழ் மிகைபடப் பேசிக்
கத்தலும் அரற்றலும் கனைத்தலும் அல்லால்
இத்தரை நம்மால் எள்ளள வேனும்
விளைவுற்ற தென்றே விள்ள முடியுமா?
களைகளை அகற்றிடக் கருதி னோமா?

மாணவர் உலகமே! மதிதகு உலகமே!
பூணுக உறுதி! பூணுக எழுச்சி!
ஆட்டமும் கூத்தும் அறவே நீக்குக!
ஓட்டமும் நடையுமா ஓய்வற் றிலங்குக!
ஆரவா ரங்கள் அடிச்சிதைத் திடுக!
தீர நினைக்க! நினைத்துத் தேறுக!
போலித் தனங்களால், பொய்மை நினைவினால்
வாலைப் பருவமும் வரட்சி யுறுவதோ?

உடுக்கையும் உண்கையும் ஊருலா வருகையும்
மிடுக்கையும் புனைவையும் மேனி மினுக்கையும்
கொண்டதே மாணவர் உலகெனக் கொடியவர்
கண்டதே போலும் காண்பதே போலும்
அலர் உரை செய்யும் அந்தப் படிக்கு,யாம்
இலம்இலம் என்றே எழுந்துரை செய்மின்!

செய்திடக் கோடிக் கோடித் தொண்டுகள்!
எய்திடக் கோடிக் கோடி ஏற்றங்கள்!

வானை அளாவி நிற்பன காண்மின்!
மானங் கருதிடும் வினைகளை நோக்குமின்!
தமிழ மக்கட்குத் தக்கன செய்மின்!
தமிழ்மொழிக் கின்னும் தகுவன புரிமின்!
'சாதிப்' பேய்களைத் தகர்த்துத் தள்ளுமின்!
சமயப் பூசலைத் தூவென இகழுமின்!
மன்பதைக் கள்ளரை மறித்து நொறுக்குமின்!
முன்புதை வுண்ட முத்தமிழ் புதுக்குமின்!
சாலா தனவெலாம் சகதியி லிட்டுத்
தோலா வெற்றியைத் தோள்களில் தாங்குமின்!

கல்லூரிக் கூடம் கலைவிலை கூடம்!
பல்வேறு உணர்வினைப் பயிற்றிடும் நறுங்களம்!

சொல்திறன்–வினைத்திறன்–மனத்திறன் எனும்படி
பல்திறன் விளைத்திடும் பல்கலைக் கழகம்!

தாழ்விலா வாழ்க்கைக்குத் தகவோர் ஆக்கிடும்
வீழ்விலாக் கல்வி வேளாண்மைக் கழனி!

நயனுறு உலகம் நல்லொளி பெறவே
பயனுறு மாந்தப் பயிர்விளை பழனம்!

எண்ணலும் இயற்றலும் இளையோர்க்குப் பயிற்றி
மண்ணுல குய்க்கும் மனம்விளை நல்வயல்!

கூனலும் கோழையும் குறுவுடல் நிமிரவே
மானமும் மறமும் வளர்புகு மறக்களம்!

நேர்மையும் தூய்மையும் நிறைவிற லாண்மையும்
சீர்மையும் பரிசுறச் செய்யும் அறக்களம்!

ஒழுக்கமும் விழுப்பமும் உயர்வுறு புலமையும்
அழுக்கா றின்றி ஆளும் அரசவை!

பொய்யும் புனைவும் புன்மையும் தீமையும்
உய்யும் உளம்புகாக் கொய்யும் கொல்களம்!

எனைத்துயிர்க் கெல்லாம் இம்மண் ணுருண்டையில்
தினைத்துணை உரிமையுண் டெனும்நெறி மன்றம்!

பிணிந்தும் பின்னியும் இணைந்தும் உயிர்க்குலம்
அணைந்தும் வாழ்ந்திடப் பயிற்றிடும் அன்பகம்!

கயமையும் கொலைமையும் களவும் புகுமன
மயக்குநோ யகற்றி மருந்திடு மருந்தகம்!

நாட்டுப் பற்றையும் நன்மொழிப் பற்றையும்
பாட்டுத் திறத்தினல் பயிற்றும் பாசறை!

தீமையை வெல்லவும் திறம்பட உழைக்கவும்
ஏமக் கருவிகள் இயற்றும் பட்டடை!

உயிர்பெறு ஊதியம், இழப்பு-என் பவற்றை
மயர்வற நிறுத்திடு வாணிக ஆவணம்!

—அத்தகு பெருமையும் ஆன்றவிந் தடங்கிய
வித்தக ஏற்றமும் விளங்கிடு கழகத்துப்
பொத்தகத் துணைபெறு புதுமைசால் மாணவீர்!
எத்தகு திறத்தினை இத்தரைக் கீகுவீர்?
செத்தழிந் திடவோ உடலுயிர் செறித்திர்?

இனியே ஆயினும் ஏற்றம் பெறுகுதிர்!
தனியே ஆயினும் தளர்வுறல் வேண்டா!
கல்விக் காலத்துக் கற்பன கற்க!
வல்வினைக் காலத்து வல்லாண்மை பெறுக!
இற்றைத் தமிழகம் மாணவர் தம்மையே
ஒற்றைத் துணையாக் கொண்டதை உணர்க!
புன்மை வினைகளைப் புறத்தே தள்ளுக!
மின்குழாம் அன்ன திரைப்பட மினுக்கிகள்
தம்மேல் எண்ணம் படர்வதைத் தகர்க்க!

பிடிப்புடை, விரைமா பூசிய முகங்கள்
துடிப்புளம், வெற்றுரை, பழிசெய் நூற்கள்

—என்னும் இவைதாம் மாணவர் உலகெனும்
இழிவுரை நீக்கி ஏறுபோல் எழுந்து

முத்தமிழ் பேணுக! மாணவ மணிகளே!
புத்துல கெய்துக! புதுக்கலை புதுக்குக!

நாட்டின் விடுதலை நண்ணுக!
ஏட்டின் வரலாறு எழுதுக இன்றே!

-பெருஞ்சித்திரன்.

தமிழா எழுச்சிகொள்!

"தமிழக மண்ணில் 360 இந்திப் பள்ளிக்கூடங்கள்–நடுவணரசு சார்பில் "—அண்மையில் வந்த நடுவணரசினர் அறிக்கை இது. இந்திரா அரசவைக்கு எத்தனேயோ பணிகள்; கடமைகள்; சிக்கல்கள்! நாளுக்குநாள் மாநிலங்களில் சட்டமன்றக் கவிழ்ப்புகள்; முனேப்புகள்! குடியரசுத் தலைவர் தலையீடுகள்! கேரளாக்கள்! புதுச்சேரிகள்! பாக்கித்தானிய சீனச் சொரி சிறங்குகள்! இவைதவிர, பேராயக்கட்சிக்குள்ளேயே நாள்தொறும்நடைபெற்று வரும்சண்டை சள்ளேகள்; குத்து வெட்டுகள்! –இருந்தாலும் தில்லி அரசுக்கு எப்பொழுதும் அணேயாத இந்திக் காதல்! இதனே அரசியல் மடமை என்பதா? அரசியல் திறமை என்பதா? உருசியாவைத்தான் கேட்க வேண்டும்.

வடவர் எப்பொழுதும் தங்களே மெத்த திறமைசாலிகளாகவே கருதியிருப்பவர்கள்; பற்றும் பற்றுமைக்குப் பார்ப்பனக் குடைச்சல்கள் வேறு; இந்திவெறியரின் குத்தல்கள் வேறு. எனவே தில்லி அரசின் குரங்காட்டத்திற்கு அளவும் இல்லே; பொழுதும் இல்லே; வெட்கமும் இல்லே. இல்லேயென்ருல் எப்பொழுதும் இந்திப் பாட்டையே பாடி, அதற்கு வரும் எதிர்ப் பாட்டைக் கேட்டுக் கொண்டிருக்குமா? அல்லது தெற்கிலிருந்து வரும் எதிர்ப்பு எத்தனே நாளேக்குத்தான் தொடர்ந்து வந்துகொண்டிருக்கும் என்று கருதியிருக்கின்ருர்களோ, என்னவோ? அவர்தம் முனேப்புகள் நமக்கு இரட்டை ஐயங்களேக் கிளப்பி இருக்கின்றன. ஒருவேளே வடவர் உண்மையிலேயே அரசியல் திறமையுள்ளவர்கள்தாமா என்பதொன்று. நாம் உண்மையிலேயே கோழைகள்தாமா என்பது மற்ருென்று. இல்லேயென்ருல் சூடுகண்ட பூனே திரும்பவும் பாலுக்கு வருவானேன்?

பொதுமக்களிடமிருந்து ஒருமுக எதிர்ப்பைக் காட்டியாகி விட்டது; இங்குள்ள அறிஞர்கள் அறிக்கைமேல் அறிக்கை எழுதி விடுத்து விட்டனர்; இந்தியைப் படிக்கப் போகும் மாணவர்களும் இந்திய அரசுக்குப் பலவாருன ஏதங்களேத் காட்டிவிட்டனர். ஆனுல் இம் முத்தர எதிர்ப்பும் எத்தனே நாட்களுக்கு மூச்சுமுட்ட வந்து கொண்டிருக்கும்? பொதுமக்கள் மனம் சலித்து விட்டனர்; அறிஞர்கள் கை சலித்து விட்டனர். மாணவர்களும் உடல் அலுத்துப் போயினர். இனி எதிர்ப்புக்கு யார் உள்ளார்? என்ற எண்ணம் போலும் அவர்களுக்கு! நல்லவேளே, இந்நிலேயில்தான் தமிழக அரசு முளேத்து; முனேந்து கொண்டுள்ளது. இனி அதுதான் தன் எதிர்ப்பு அனலேக் கக்கியாக வேண்டும். தில்லியரசின் ஊழியர்கள் அடச்சு

முறைச் சட்டத்தைக் கேரளா வடவரின் முகத்தின்மேல் விட்டெறிய வில்லையா? ஆந்திர அரசு மதுவிலக்குக் கொள்கையைச் சாய்க் கடையில் போட்டுவிட வில்லையா? தமிழக அரசுமட்டும் என்ன? வடவரின் குரங்காட்டத்திற்குத் தாளமா போடும்? இந்திக் கொள்கை ஒன்றை வைத்தே நாட்டை வெட்டிக்கொள்ள முயற்சி செய்ய வேண்டியதுதான்!

தமிழ் நிலத்தில் இந்திக் களை ஊன்றவே கூடாது. இத்தனை ஆண்டுகளாக தமிழர் வடவர்க்கு வல்லடிமையாய் இருந்ததுபோதும். அக் கொள்கை பக்தவத்சலத்தோடு குழிதோண்டிப் புதைக்கப் பெற் றது. இனி எந்தச் சட்டத்திற்கோ, ஆணைக்கோ தமிழக அரசு அஞ்சக் கூடாது. தன் வலிந்த எதிர்ப்பைக் காட்டியே ஆகல் வேண்டும். முடிந்தால், சுருட்டி வைத்து மூலையில் போட்ட நாட்டுப் பிரிவினையை மீண்டும் வடவர்முன் விரித்துப் படித்துக் காட்டவே வேண்டும். தயங்கக்கூடாது; மயக்கமும் கூடாது. தமிழ்ப் பட்டா ளம் ஒன்றும் இந்திப் பட்டாளத்திற்கு இளைத்தது இல்லை என்பதை உணர்த்தியே ஆகல் வேண்டும். அத்தகைய காலமும் வந்தது. செத் துப் பிறந்தவர்கள் நாம். பட்டு உணர்ந்தவர்கள் தமிழர்கள்; கெட் டது போதும். தமிழா! இனியாவது உன் கிளர்ச்சியைக் காட்டு! வளர்ச்சியை நிலைநிறுத்து.

இந்திப் பள்ளிக்கூடங்களுக்கு இங்குள்ள ஓட்டைக் குடிசைக ளிலும் இடம் வைக்கக் கூடாது. தெருத்திண்ணைகளிலும் காலடி வைக்க விடக்கூடாது. குடுமிகளும் பூணூல்களும் தம்தம் வீட்டு அடுப்பங்கரைகளிலாவது இந்திக்கு இடம் வாங்கித் தந்துவிடத் துடிக்கும். அதற்கும் இடம் வையாதே! அடிமைக் கல்வி நமக்குத் தேவை இல்லை என்பதை அடிப்படையிலிருந்து விளக்கிக் காட்டு. தமிழக அரசு தன்னால் செய்வதைச் செய்யட்டும். நாமும் நம்மால் ஆனதைச் செய்துதான் ஆகவேண்டும்.

அரசை மீறி, நம்மைமீறி இங்கு இந்திப் பள்ளிக்கூடங்கள் திறக்கப்பட்டால், இந்தி நூல்கள் தீக்கிரையாக வேண்டும். இந்திப் பள்ளிகள் இடித்துத் தள்ளப்பட வேண்டும். இந்தியாசிரியர்கள் தம் வாய்களுக்குத் திண்டுக்கல் பூட்டைப் பூட்டித் திறவுகோலை இந்திரா அமைச்சரவைக்கு அஞ்சலில் விடுக்க வேண்டும். எச்சரிக்கையாய் இரு தமிழா! தூங்கிவிடாதே! தூங்கித் தூங்கி வல்லடிமைச் சேற் றில் உழன்று உயிர் காய்ந்தது போதும்! உயிர்த்து எழு! வீறு கொண்டு நில்! அரிமா என உலா வா! இனி உலகில் உள்ள எவனுக்

கும் நீ அடிமையாகக் கூடாது. தேசியங்களைப்பற்றிக் கவலை கொள்ளாதே! பருக்கைச் சோற்றுக்குப் பறந்து திரியும் அந்த அண்டங் காக்கைகளுக்கு அஞ்சிவிடாதே, நீ! நீ கோழையில்லை என்பதை உலகுக்கு உணர்த்து! நீ எவர்க்கும் அடிமை இல்லை என்பதைக் குன்றின்மேல் நின்று கூவு! வாழ்வு புதியது! சாவு பழையது! அடிமையின் இனிப்பு நாக்கோடு சரி! உரிமை உயிரிலும் இனிக்கும்! உடலெல்லாம் இனிக்கும். தில்லியின் வலிந்த பிடிக்குள் இருந்து நீ விடுபட்டு வா! அதன் சூழ்ச்சித் தழுவலிலிருந்து உன்னை விடுவித்துக்கொள். முப்பது நூற்றாண்டுகளாக நீ அடிமை! உன் உடலின் அணுக்கள் முழுவதும்கூட மாறியிருக்கும். ஆனால் நீ இன்று விழித்துள்ளாய்! மீண்டும் விழிமூடித் தூங்காதே! விழித்தெழு! உரிமை கேள்! தரப்பட வில்லையானால் அதன் வலிந்த பிடியை உதறித்தள்ளு! பார்ப்பான் பசப்புக்கும், வடவன் நயப்புக்கும் நீ செவிதராதே! அரசியல் மூடுமந்திரத்திற்கு நீ ஆட்படாதே! உரிமை வானில் பறந்து திரி! உன் மூச்சுக்காற்றில் தில்லியின் சப்பாத்தி மணம் வீசக்கூடாது. தமிழகத்தின் சோற்று மணம் வீசுதல் வேண்டும். மேலாடைக்கு அலைந்து திரியாதே! உன் இடைச்சீலை பறிபோகாமல் இருக்கப் பார்த்துக்கொள்! ஒற்றுமையும் ஒருமைப்பாடும் பேசி உன்னை வெற்றுளாக்க வளைந்து திரியும் கழுகுகளுக்கு நீ இரையாகாதே!

-பெருஞ்சித்திரன்.

உடல்நோயா? அஞ்சாதீர்கள்!

O ஆயிரக்கணக்கான ஓலைச்சுவடிகளில் பொதிந்து கிடந்த பண்டைத்தமிழ் மருத்துவத்தின் அரிய வெளியீடு!

O எந்தவகை நோயாயிருந்தாலும் அஞ்சவேண்டா. கை கால் முடக்கம், இழுப்பு, கணை, ஈரல்கட்டி, சோகை, காமாலை, மாந்தம் முதலிய குழந்தை நோய்களையும், நெஞ்சாங்குலை வீக்கம், மாரடைப்பு (Heart-Failiar), உறுப்பு முடக்கம், புற்று (Cancer), குருதிக் கொதிப்பு, சிறுநீரில் உப்பு, சருக்கரை, ஈளை, எலும்புருக்கி (T. S) முதலிய எண்ணற்ற முதியோர் நோய்களையும் உடனடியாகவும் குணப்படுத்துகின்றோம்.

O பெரிய பெரிய ஆங்கில மருத்துவர்கள் கைவிட்டிருந்தாலும் சரியே-ஒருமுறை நேரில அணுகுங்கள்.

க. கலைச்செல்வி (சரசுவதி)
(பாவேந்தர் பாரதிதாசன் மூத்தமகள்)
அக்ரகாரம், திருநிலையூர், கரூர், திருச்சிமாவட்டம்.

கடவுளர் பட நீக்கம்

அரசு அலுவலகங்களிலிருந்து கடவுளர் படங்களை அகற்றுவதெனத் தமிழக அரசு மேற்கொண்டிருக்கும் சீரிய முடிபு உண்மையிலேயே வரவேற்கத்தக்கது; பாராட்டுக்குரியதுமாகும். ஆனால் அரசின் இச் செயலாண்மை குறித்துச் சில சோம்பேறிகள் பொருளற்ற முறையில் வீண் புரளிகளையும் சந்தடிகளையும் கிளப்பிக் கொண்டிருக்கின்றனர். அரசியல் நோக்குடன் இவ்வாறு சந்தடிகளை உண்டாக்கினால் அது கண்டிக்கத்தக்கதாகும். எந்தக் கட்சியானாலும் அஃது அறிவியலை மதித்தாக வேண்டும். இன்றைய தமிழக அரசு அறிவியல் வழியினில் சற்றே ஆண்மை கொண்டு மேற்கொள்கின்ற இதுபோன்ற ஒருசில சீர்திருத்த நடவடிக்கைகளுக்கும் தடையாக இவ்வாறு புரட்டுகளைக் கிளப்பிக் கொண்டிருக்கும் வரையில் நம் நாட்டிலுள்ள மூடத்தனங்களுக்கு விடிவேயில்லை, சப்பான் போன்ற நாடுகளைப்போல் முன்னேற வேண்டுமென்ற எண்ணம் இருக்குமானால், உழைக்கின்ற இடத்திலாவது உழைப்புக்கு முழு இடம் கொடுக்கப்பட வேண்டும். வீடுகளைப் போல், கோவில்களைப்போல் அலுவலகங்களையும்வழிபாட்டுக்குரிய இடமாக்கி, அவரவர் விருப்பம்போல் கடவுளர் படங்களைக் கொண்டுவந்து மாட்டிக் கொள்வது பெரிதும் நகைப்புக்குரிய செயலேயாம். நமது நாடு முன்னேறாமல் முடங்கிக் கிடப்பதற்குத் தலையாய கரணியமே இங்கு உழைப்பின் மீது நம்பிக்கை வைக்காமல், புரியாத பிற ஆற்றல்களின் மீது நம்பிக்கைவைத்துக் கணக்கற்ற கடவுளர்களைப் படைத்து வைத்து வழிபாடு செய்து, விதைக்காமல் அறுவடை செய்ய விழைகின்ற சோம்பேறித் தனமேயன்றி வேறல்ல. அலுவலகங்கள், தொழிலகங்கள் மட்டுமன்றி, உறைகின்ற இல்லங்களைக்கூட உழைப்புக் கூடங்களாய் மதித்து உழைப்பையே கடவுளெனப்போற்றும் சப்பான், உருசியா போன்ற நாட்டினர் நமது இந்தியாவின் பின்தங்கிய நிலைக்குக் கரணியம் எங்கே ஒளிந்திருக்கிறது எனக் கண்டுகொண்டு நம்மைக் கண்டு நகைப்பதற்கே நாம் மேலும் இடம் தருகிறோம். சீர்திருத்தத்திற்கு மக்கள் செவி கொடுக்காத வரையில் நாடு ஓரடிகூட முன்னேறப் போவதில்லை.

நமது அரசு சமயச் சார்பற்றது. ஆகவே, பொது இடங்களனைத்திலும் தனி மாந்தனின் நேர்மையான உணர்ச்சிகளனைத்தும் காக்கப்பட வேண்டியது தேவை. ஆலயங்களிலோ பள்ளிவாசல்களிலோ நுழையுமாறு ஒருவன் கட்டாயப்படுத்தப் படுவதில்லை. சமயச் சார்புகளிலிருந்து விலகியிருக்கும் உரிமை எல்லாருக்கும் உண்டு. அரசு அலுவலகங்கள் என்பது சமயக் குரவர்களின் கோயில்களல்ல. அங்கே கடவுளர் படங்கள் இருப்பதனால் பொது மாந்தனின் உணர்ச்சிகள் எள்ளி நகையாடப் படுகின்றன. சமயச் சார்பற்ற தன்மை என்றால் தனிப்பட்ட சமயங்களில் தலையிடாமையும், பொது மன்றங்களிலும் இயக்கங்களிலும் சமயத்தைப் புகுத்தாமையுமே யல்லாமல், எல்லாச் சமயங்களிலும் சம அளவில் தலையிட்டு உரிமை வழங்குவதன்று. அவ்வாறு உரிமை வழங்குவதெனில், ஒரு சிறிய அலுவலகத்தில் எல்லாக் கடவுளர், தேவர், தேவியர் படங்களையும் அடுக்கி அடுக்கிச் சுவர்களை மறைக்க வேண்டியிருக்குமே!

கடவுளர்களையும் அவர்தம் அன்பர்களையும் அழித்து ஒழிப்பது அரசின் நோக்கமா? நாட்டிலுள்ள கோவில்களை இடித்துத் துறவிகளையும் பாதிரிமார்களையும் விலங்கிட்டுச் சிறைக்கூடத்தில் தள்ள வேண்டுமெனத் தமிழக அரசு ஆணை பிறப்பித்து விட்டதா? அலுவலகங்கள் அலுவலகங்களாகவே இருக்கட்டும் என உழைப்பின் பெற்றியை உணர்ந்து நாளைய குமுகாயத்தின் மறுமலர்ச்சி கருதிக்கடவுளர் பட நீக்க ஆணையிட்டால் அதற்கு ஏன் இத்தனைக் குழப்பமும் கூச்சலும் குதிப்பும் கொக்கரிப்பும்? கடவுள் அன்பர்களே! அலுவலகங்களில் உள்ள படங்களை நீக்கினால் உங்கள் மனம் புண்படுவதாக அளக்கிறீர்களே! உழைக்கின்ற உணர்வோடு மட்டுமே பணிமனைகளுக்குள் நுழையும் என் போன்றவர்களின் மனம் கடவுளர் படங்களையும் பூப்பலி நடவடிக்கைகளையும் கண்டு புண்படுவதையும் உணர்ந்து பார்த்து ஒப்புக்கொள்கிற பண்பாடு உங்களிடத்தில் உண்டா? கடவுளர்களைக் கும்பிட உங்களுக்கு வீடுவாசல் கிடையாதா? நான்கு என்ன, நானூறு படங்களை வைத்துக் கொண்டு நாள்முழுதும் அங்கேயிருந்து கும்பிடுங்களேன்! அதற்கு யார் தடையிட்டார்கள்? சுவரொட்டி ஒட்டுகிறீர்களாமே! இந்தச் செயல்களைச் செய்ய நாங்கள் அறிய மாட்டோமா? உங்களுக்கெதிராக நாங்களும் கிளம்பிவந்து சுவரொட்டி ஒட்டத் தொடங்கினால் பின்னர் அதற்கு முடிவெங்கே? காலத்தையும் பொருளையும் வீணடிக்கும் முயற்சிகளில் ஈடுபட்டு மக்களை ஏமாற்றாதீர்! சப்பா

னைப் போன்று உழைத்துச் சீர்திருந்தி முன்னேறுவது எப்படி என்று உங்கள் அறிவுரைகளைச் சுவரொட்டிகளாக அச்சடித்துத் தெருவெங்கும் ஒட்டுங்கள். அதுதான் அறியாமையில் ஆழ்ந்து உணர்வற்றுக் கிடக்கும் இன்றைய தமிழ்க் குமுகாயத்திற்குத் தேவையாக இருக்கும் என்பதை உணர்ந்து பாருங்கள்.

–ஆ. தருமராசு, மாவட்ட வேளாண்மை அலுவலகம்,
சேலம்–7. (20–9–68)

திருவள்ளுவர் முனிவரா?

ஐயன்மீர்!

மாநிலத் தலைமைச் செயலாளர், சமயச் சார்பற்ற இந்தியாவின் எல்லா இனத்தவரையும் ஒன்றுபடுத்துவதற்குச் சிறந்த வழிகாட்டும் சுற்றறிக்கை யொன்று பிறப்பித்தமைக்காக, நன்றி செலுத்தப்பட வேண்டியவராகின்றார். அந்தச் சுற்றறிக்கை, மற்றவற்றுடன்கூட, முனிவர்களின் உருவப்படங்கள் வைப்பதையும் தடை செய்கிறது; எனினும், அச்செய்தி திருவள்ளுவ "முனிவரு"டைய உருவப்படத்தைப் பற்றிக் கூறுகிறது.

திருவள்ளுவரை "முனிவர்" என்று குறிப்பிடும் தவறுஒருவேளை, இரண்டாண்டுகளுக்கு முன்பு அப்போதைய முதல் அமைச்சர் திரு. பக்தவத்சலம், திருவள்ளுவர் பிறந்த நாளுக்கு விடுமுறை அறிவிப்பது பற்றிய தமது குறிப்பில் திருவள்ளுவ "முனிவர்" "முத்தி" யடைந்ததாகக் கூறியதைப் பின்பற்றியதாகலாம் "முனிவர்" என்னும் அடைமொழி உரோமன் கத்தோலிக்க மூலம் கொண்டதாகலின், "முத்தி" என்னும் சொல் அரபிய–சிந்து மூலததையுடைய கடவுள் நம்பிக்கைக் கொள்கைக்கே உரியதாதல்போல, அம்மரபிற்கே உரியதாதல் வேண்டும். திருவள்ளுவர் "கடவுள்" "முனிவர்" "துறக்கம்" "முத்தி" போன்ற சொல்லாட்சியை விலக்கியுள்ளார் என்பதை நினைக்கும் பொழுது, 'முனிவர்' 'முத்தி" எனனும் சொல்வழக்கு தவறான குறியீடு மட்டுமன்று; அத்துடன், திருவள்ளுவரும் அவர்தம் குறளும் பெரிதும் மதித்த உறுதியான அறநெறிக் கொள்கைகளுக்கு முரண்பட்டதும் அப்பாற்பட்டதுமான கருத்துக்களை வலிதிற் புகுத்தும் நுணுக்கமான குறும்பாகவும் கருதப்படுதல் வேண்டும்.

–த. உலகநாதன், (பொறி இ) ஓய்வுபெற்ற மேற்பார்வைப்
பொறியாளர், இர. ச புரம், கோவை

திரைப்படப் போராட்டம்!

"தமிழ் இனி மெல்லச் சாகும்" என்று ஒரு பட்டிமன்றத்திற்குத் தலைப்புக் கொடுத்திருந்ததாக முன்பு கேள்வியுற்றேன். தமிழகத்துத் திரைப்படத் துறையைச் சேர்ந்த "கோபாலகிருட்டிணன்" "சோ" போன்றவர்கள் அதை மெய்ப்பிப்பதற்கான பெருமுயற்சியில் ஈடுபட்டுள்ளதுபோல் தோன்றுகின்றது. ஒருபுறம் பேரறிஞர். தேவநேயப் பாவாணர்,பெருஞ்சித்திரனார் போன்றோர் தமிழர் தலையெடுக்க வேண்டுமெனப் பாடுபடும் பொழுது இத்திரைப்படப் புல்லுருவிகள் தமிழர் நாகரிகத்தையும் பண்பாட்டையும் குழிதோண்டிப் புதைக்கும் வேலையைத்தாங்கள் அறிந்தோ அறியாமலோ செய்கின்றனர். சென்னை மாநகரில் கடைநிலை மக்கள் பேசும் சிதைவுற்ற பேச்சுவழக்குத் தமிழைத் தமிழகத்தின் பிற பகுதிகளுக்கும் பரப்ப வேண்டுமென்பது தான் இவர்களது கொள்கை போலும்! இன்றைய திரைப்படத் துறையைச் சற்றே ஊன்றிக் காண்க.

தமிழ்ப் பண்பாட்டிற்கு ஒரு சிறிதும் ஒவ்வாத கதையைத் தேர்ந்தெடுத்துச் சென்னைத் தமிழில் அதற்கு உரையாடல் எழுதுகின்றனர். ஆடையைப் பற்றிக் கவலையுறாத நிலையில் நடிகர், நடிகையரைக் கோமாளிக் கூத்தாட (நடிக்க) வைத்துப் பாலுணர்வை மிகவும் தூண்டிவிடுகின்றனர். குடிகாரர்களின் வாயிலிருந்து வெளிவரும் உளறல்களையெல்லாம் பாட்டென்று எழுதிக் கொண்டு அதற்கு டப்பாங்குத்து இசையமைத்து அருவருப்பாகப் பாடவைக்கின்றனர். பொதுவில் தமிழகத்து இளைஞர்களின் உள்ளங்களைக் கெடுத்து, மிகப்பெரியதொரு படுகுழிநோக்கி அவர்களைத் தள்ளுகின்றார்கள். பெரும் பொருட்செல்வம் முடங்கிக் கிடக்கும் இத் திரைப்படத்துறை மக்களுக்கு நன்முறையில் பயன்பட வேண்டும். அதற்கான வழிமுறை பற்றி எண்ணுவது தமிழர்களது தலையாய கடமை. இந்நிலை வளரவிடாமல் தடுப்போம். தென்மொழி மூலம் விரைவில் இதற்கொரு முடிவு கட்டிடுவோம். திரண்டெழுக! வாழ்க தமிழ்! வளர்க தென்மொழி!

—நா. பாலசுப்பிரமணியன், நீடாமங்கலம். (24-7-68)

பாரதீ வெறி

'பாரதியார்' என்றதும் அவரைப் பாராட்டவே செய்கின்றனர். குணம் நாடல் இல்லை-குற்றம் நாடுதலும் இல்லை. மிகையறிதலும்

இல்லை. எப்படி அவரைப் பாராட்டலாம் என்றும் அறிந்தோமில்லை, அவர் என்ன செய்துவிட்டார்?

''நம் முன்னோர்களும் அவர்களைப் பின்பற்றி நாமுங் கூடப் புண்ணிய பாஷை யாகக் கொண்டாடிவரும் சமஸ்கிருத பாஷை மிகவும் அற்புதமானது. அதைத் தெய்வ பாஷை என்று சொல்லுவது விளையாட்டன்று. மற்ற ஸாதாரண பாஷைகளை யெல்லாம் மனித பாஷையென்று சொல்லுவோமானால், இவை அனைத்திலும் சிறப்புடைய பாஷைக்குத் தனிப்பெயர் ஒன்று வேண்டுமல்லவா? அதன் பொருட்டே. அதைத் தெய்வ பாஷை என்கிறோம்'' ''எந்த நாட்டினரைக் காட்டிலும் அதிகமாக யதார்த்தங்களைப் பரிசோதனை செய்து பார்த்த மஹான்கள் வழங்கிய பாஷை ''

—பாரதியாரின் ''தத்துவம்'' பக்கம். 67–68.

என்று இங்கே கோடிட்டுக் காட்டிய இடங்களைப் படித்ததும் என்ன எண்ணுகின்றீர்கள்? பாரதியார் தம்மையும்மீறி('செந்தமிழ்நாடு' பாட்டில் சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே என்று பாடிய போதும்)– இல்லை-திட்டமிட்டே தமிழைத்தாழ்த்தி விட்டார்–அடிமைப் படுத்துகிறார் என்று தோன்றவில்லையா? எனவே, தமிழர்களே! விழிப்பாக இருங்கள்–நண்பர் யார்? பகைவர் யார்? என்றறியாமல் திரியவேண்டாம். பாரதியின் ஆரியவெறி அம்பலம் ஏறிவிட்டது, இல்லையா?

எவர் நூலாயினும் தமிழ்நெஞ்சில் உரைத்துப்பார்க்க அஞ்சாதீர்.

—அறிவன்புமலர்–பறம்பை, முகவை.

ஆரியர் ஐயுறவு!

கா. நா. சுப்பிரமணியம் என்னும் ஆரியப் பார்ப்பனன் சென்ற 19-5-68 "The Sunday Standard Weekly Magazine" நாளிதழில் "The World of Learning in Tamil" என்னும் தலைப்பின் கீழ் தமிழ்மொழியின் தொன்மை, மென்மை, வளமை, இனிமை, தனிமையை இழித்தும் பழித்தும் கடைகெட்ட மொழியால் வசைமாரி பொழிந்திருக்கிறான். அவ்வாரியப் பார்ப்பனன் இறை மொழியாம் நம் தமிழ் மொழியைச் சாடுங்கால் நவிலும் கருத்துகள் ஆவன:

1. தமிழ்ப் புலமை இன்னும் பிள்ளை பருவத்தில் இருப்பது.
2. தமிழர்கள் வரைமுறையின்றி அவர்தம் மொழியைப்புகழ்வது

3. தமிழ் ஆரிய சமற்கிருதத்தின் துணையின்றி வாழும் நிலையை ஐயுறுவது.
4. தமிழ்க் கோடரிக் காம்பு வையாபுரியின் மொழிக்கருத்தையும் வரலாற்று ஆய்வுரையையும் ஒப்புவது.
5, வள்ளுவர் வாழ்ந்த காலத்தையும் ஆண்டையும் ஐயுறுவது.
6. தமிழில் கிறித்துவுக்குமுன் எழுத்துகள் இல்லை யென்பது.
7. குறள்நெறிதான் தமிழர் வாழ்வு முறை என்பதை இகழ்வது.
8. தமிழில் செய்யுட்களே இல்லை; ஒன்றுக்குப்பின் ஒன்று முரணுக உரைப்பவைதான் தமிழ்ப் பாடல்கள் என்பது. இன்னேரன்ன காரணங்களைக் காட்டி தமிழர் நெஞ் சங்களை—குமுறும் உள்ளங்களை உலைக்களமாக்கியிருக்கிருன்.

இவனைப்போன்ற ஆரியப் பார்ப்பனர்களும். இன்னும் நம்மிடையே வாழும் நம் அநுமவீடண சுக்கிரீவர்களும் தெளியும்பொருட்டு, உணரும் பொருட்டு; தமிழ்மொழியின் உண்மை வரலாறும், அதன் தொன்மை நிலையும், தனிமைச் சிறப்பும், உலக மொழிகளின் தாய்மைத் தன்மையும்; இயற்கை முறையும், இலக்கியமென்மையும், இலக்கண முழுமையும்; சொல்லாற்றல், பொருளாற்றல், கருத்தாற்றல் யாவும் மிளிர நீண்டதோர் ஆய்வுக் கட்டுரைதனைத் தென்மொழியில் புனையுமாறு ஆயிரமாயிரம் தமிழன்பர்கள்-'தென்மொழி' அன்பர்கள் சார்பில் மிகவும் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். நற்றமிழின் தொல்பெருமை எத்திக்கும் பரவட்டும். எந்தமிழர் வாழ்வும் நலமுடன் திகழட்டும.

—ந நந்தகுமார், லிங்கராசபுரம், பெங்களூர்—5

தமிழ்ச் சுற்றம்!

அன்புடை ஆசிரியப் பெரும! வணக்கம். தனித்தமிழ் இதழ்கள் நம்மவரிடை போதிய ஆக்கம் பெருமல் இருப்பதற்குக் காரணியம் இவ்விதழ்கள் மக்களின் எண்ணத்தை ஈர்க்க இயலாமையே . அது மட்டுமன்று; தமிழ்ப் பற்றுள்ளம் கொண்டோரும் இதற்கு ஆக்கம் தராமையேயாகும. உயர்தனிச் செம்மொழி என்று உலகத்தவரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நந்தமிழ், நம்மவர் உள்ளங்களில் உயரிய

இடம் பெருமை வருந்துதற்குரியதாகும். இவற்றையெல்லாம் மனத்திற்கொண்டு, தமிழியக்க ஏடுகள் பரவவேண்டித் "தமிழ்ச்சுற்றம்" என்ற அமைப்பினை நாங்கள் ஏற்படுத்தியுள்ளோம். அனைத்து ஏடுகளையும் ஒருவரே வாங்குதல் என்பது இற்றைய பொருளியல் நிலையில் இயலாத செயலாகும். எனவே, நண்பர்கள் சிலர் கூட்டாகச் சேர்ந்து எத்தனைத் தமிழியக்க ஏடுகள் இருக்கின்றனவோ—அத்தனையும் வர ஏற்பாடு செய்து—அவற்றை மக்களிடைப்பரப்புவதே தமிழியக்கப் பணியெனக் கருதி அதற்கெனத் "தமிழ்ச்சுற்றம்" என்ற அமைப்பினை ஏற்படுத்தியுள்ளோம். இத்தகைய அமைப்பினை ஊர்தோறும் ஒரு சிலர் ஏற்பாடு செய்தாலே போதும். தமிழியக்க ஏடுகள் பரவுதற்கும், அவற்றிற்கு ஆக்கம் தருதற்கும வழி யேற்படும். எங்களது முயற்சி சிறியதுதான் என்றும் அறிவுடைப் பெருமக்களால் ஏற்றுக்கொள்ளக் கூடியதாகும் என்றும கருதுகிறோம்.

—புலவர். ஆயை. மு காசாமைதீன், வத்தலக்குண்டு. 11–6–68

ஆசிரியர்:
மன்னர் மன்னன்

O பாவேந்தர்பாடிய 'குயில்' பாவேந்தரைப் பாடுகிறது!
O 'நினைவுமண்டபம்' படியுங்கள்!

தனி இதழ் 75 காசு.
ஆண்டுக் கட்டணம் 10 உருபா.

பாரதிதாசன் குயில்
புதுச்சேரி-1.

(56-ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் பல கல்லூரிகளில் தமிழிலும் ஆங்கிலத்திலும் சொல்லித் தான் மாணவர்களுக்குப் பாடம் புகட்டுகின்றனர்.

பயிற்றுமொழி தாய்மொழியாகத்தான் இருக்கவேண்டும் என விரும்பும் சிலர், "உலகத்து மொழி யெதிலுமே கலப்பில்லாமல் அறிவியலைக் கற்பிக்க முடியாது; புதுப்புது அறிவியற் கருத்துகளைப் புலப்படுத்துவது தூய தனித் தமிழிலே இயலாது" என மயங்குகின்றனர். தனித்தியங்கும் திறமில்லா ஏனைய மொழிகளால் இயலாததால் உலக மொழிகள் அனைத்துக்கும் தாயாகவிருக்கும் இனிய தமிழாலும் இயலாதெனல், மற்றவள் மலடியென்பதற்காகப் பதினாறு சிறப்புகளைக் கொண்டவளும் அங்ஙனமே இருக்க வேண்டும் எனக்கருதுதல் போன்றதே யல்லவா! நமது "சோம்பல், அடிமை, அறியாமையால் தமிழை ஓம்பல் குறைவால் உலகவழக் கற்றொழிந்த பைந்தமிழ்ச் சொற்கள் பலகோடி! நாற்புறமும் சென்று மறைந்துவரும் செந்தமிழ்சேர் சொற்களை ஒன்று திரட்டி உரிய பொருள் ஆய்ந்தெழுத'[13] முயலாமல் சேய்மொழிச் சொற்களையே கொள்ளுதல் நமது ஏலாமையையன்றோ புலப்படுத்துகிறது! பிறமொழிச் சொலலாட்சியும் சொற்பெயர்ப்பும் தானொளிரியாக (Self luminous source) இருக்கும் தமிழுக்குத் தேவையில்லை. இம்மயக்கந் தவிர்க்க, 'மெய்ப் பொருள் காணும் பேரறிவு படைத்தபுலவரான தேவநேய'னரைத் தலைவராகக்கொண்ட 'பல்துறை மொழியாக்கக்குழு' வமைத்தல் இன்றிமையாததன்றோ!

ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத் திருளகற்றும்—ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன் றேனையது
தன்னே ரிலாத தமிழ்.

13. "தென்மொழி"-மறைந்துவரும் தமிழ்ச் சொற்கள்.

0 தனித்தமிழ் அன்பர்களுக்கொரு புதிய படைக்கலன்!
0 தமிழக மாணவர் நடத்தும் திங்கள் இதழ்!
0 இன்றே உறுப்பினராகுங்கள்!

மாணவன் யாழ்.

[தனியிதழ் 25 காசு]
விளக்கங்களுக்கு:
மாணவன் யாழ்
81/5. பாண்டி பசார், தி, நகர்,
சென்னை.

இலக்கியம்

நூறாசிரியம்

துரைமாணிக்கம்.

பாடல். ௧௫.

நெஞ்சு நிலனாக நினைவு வித்தாக
ஐம்புலக் கொழுசார் அறிவு பகடாக
முயல்வுந் துணிவும் இணையே றாக
வைகலு முழுது, கற்புநீர் பாய்ச்சி
ஒழுகுநாண் நட்புரன் ஏம மாக
ஐய,நீ பயந்த வாணாட் டாயத்து
வையம் உய்தல் வேண்டி அயர்வின்றி
மெய்யின் விளைபுகு வுணர்வேம்
செய்பயன் முற்றும் நின்னளி யன்றே!

பொழிப்பு:-

எம் நெஞ்சம் நிலனாகவும், அந்நெஞ்சகத்தே ஊன்றப்பெறும் நினைவே வித்தாகவும், ஐம்புலன்கள் எனும் கொழுக்களால் சாரப் பெற்ற எம் அறிவு ஏராகவும், முயற்சி, துணிவு என்பனவே அவ்வறிவு ஏரின் பிணிக்கப்பெற்ற இணை ஏறுகள் ஆகவும் கொண்டு நாள்தொறும் உழுது, (அவ்வித்து வளரக்)கல்வி என்னும் நீரைப் பாய்ச்சியும், ஒழுக்கம், நாணம், நட்பு, உரன் என்னும் நாற்புடைக் காப்பிட்டும், தலைவனே, நீ நல்கிய இவ் வாழ்நாள் எனும் உரிமைக்காலத்து, இவ் வையகம் உய்யுமாறு விழைந்து, அயர்விலாது, மெய்ம்மையின் விளைவு செயப் புகுந்த இவ்வுணர்வுடையேம் செயக்காணும் பயன்கள்முழுவதும் நின் அருட்கொடையே!

விரிப்பு:-

இப்பாடல் புறத்துறையைச் சார்ந்ததாகும்.

தூசகல் நெஞ்சொடு மாசறு காட்சியின் துலங்கத் தோன்றிய மெய்யறிவினர்க்கு, இவ்வுலக இயக்கமாக அமைந்த வாழ்க்கை, வையம் உய்யுமாறு விழைதற்கும், அதன் பொருட்டு அயர்வின்றித் தம் பொறிப் புலன்களால் பயன் விளைத்தற்குமே என்பதை வலியுறுத்திக் கூறுவதாகும் இப்பாட்டு.

இப்பாடலின்கண் மெய்யறிவினர் செய்யும் அறிவு வேளாண்மை நன்கு விளக்கப் பெற்றது. நிலனுழுது பயன் விளைக்கும் உழவோர்க்கும், புலனுழுது பயன்விளைக்கும் புலவோர்க்கும் பொதுவாய வினைகளும் கருவிகளும் அமையக் கூறியது கருதற் பாலது.

நெஞ்சம் நிலமாகவும், அதன்கண் ஊடாடும் நினைவு, அந் நிலத்தின்கண் விதைக்கப்பெறும் விதையாகவும், நெஞ்சத்தை உழும் அறிவு, நிலத்தை உழும் ஏராகவும், அவ்வறிவு முற் செலப் பயன்படும் ஐம்புலன் உணர்வுகளும், ஏருக்கமைந்த ஐந்து கொழு முனைகளாகவும், அறிவாகிய ஏர் உள்ளத்தை உழுதல் செய்யத் துணைசெய்யும் முயற்சி, துணிவு இரண்டு இயல் பூக்கங்களும் ஏரை இழுத்துச் செல்லும் இரண்டு காளைகளாகவும், வாழ்வின் ஒவ்வொரு நாளுமே உழவு செய்யப் பெறும் பருவமாக வும், கல்வி முயற்சியே பயன் விளையப் பாய்ச்சப்பெறும் நீராக வும், ஒழுக்கம், நாணம், நட்பு, உரன் என்பவையே அந் நெஞ்ச நிலத்து விளையப்போகும் மெய்யறிவுப் பயிர்க்கு நாற்புறமும் காப்பாக அடைக்கப் பெற்ற வேலிகளாகவும், நமக்குற்ற வாழ் நாள் நாம் வேளாண்மை செய்தற்காக அளிக்கப்பெற்ற உரிமைப் பட்டயமாகவும், வையம் உய்தல் வேண்டி அயர்வின்றி மெய்யாக வேளாண்மை செய்து பயன் காணுவதே நமக்குற்ற கடன் என்றும், அதுவே நம் தலைவனாகிய இறைவன் நமக்கிட்ட கட்டளை என்றும் இப்பாட்டின்கண் உருவக வழி உணர்த்தப் பெற்றுள்ளது.

நெஞ்சம்-உள்ளகம்-உளம்-மணம். நில் என்னும் வேரடியாகப் பிறந்தசொல். பிறிதொரு பாட்டில் மனம் என்னும் சொல் மன்-

நிலைத்தல் என்னும் வேரடியாகப் பிறந்த சொல் என்று காட்டப் பெற்றது. உள்ளம் என்பது உள்–நினை என்னும் பொருளடியாகப் பிறந்த சொல் என்பதும் முன்னர் காட்டப்பெற்றது. ஈண்டு நெஞ்சம் என்பதும் நினைவுஎன்னும்பொருளை அடிநிலையாகக்கொண்டே தோன்றிய சொல்லாகும்.

நில்–நிள்–நிளை–நினை–நினைவு

நிள்–நெள்–நென்–நென்சு–நெஞ்சு–நெஞ்சம்–'சு' பெயர்ச் சொல் இறுதி.

நினைவுக்கிடனுகிய பொருள் நெஞ்சம். இனி நெஞ்சம், உள்ளம், மனம் என்னும் முச்சொற்களும் ஒரு பொருள் குறித்த பல சொற்கள். இவை மூன்றும் மூன்று பயன்நோக்கி முச்சொற்களாக வெளிப்பெற்றன. புதிய கருத்துப் புலப்பாடோ, பயனோ இன்றிச் சொற்கள் பிறவா.

நமக்கு உள்ளமாக அமையப்பெற்ற அகக்கருவி மூன்று நுண்ணிய இயக்கங்களைக் கொண்டது. வல்லார் உள்ளத்து அலைகளாக வெளிப்படும் நினைவலைகளைத் தாங்கும் அல்லது வாங்கும் அலை வாங்கி ஆகவும், தன்னிடத்தே எழும்பும் நினைவை அலைகளாக வெளிப்படுத்தும் அலைபரப்பியாகவும், நினைவை வாங்கவோ, வெளிப்படுத்தவோ விழையாவாறு தன்னை நிலைப்படுத்திக்கொள்ளும் அடக்கியாகவும் மனம் முவியக்கம் கொண்டது. இனி இம் மனம் இம்முத்திறத்தும் அறிவுடன் சேர்ந்து உள்வாங்கப்பெற்ற அல்லது வெளியிடப்பெற்ற, அல்லது நிலைநிறுத்தப்பெற்ற மனவலைகளின் சூடும் குளிர்ச்சியுமாகிய தன்மைகளைத் துய்க்கும் ஆற்றல் வாய்ந்தது. அறிவுடன் கலந்தாலல்லது மனம் துய்ப்பு உணர்வைப் பெருது. குழந்தைகளின் உள்ளம் நினைவலைகளை வாங்கவும் வெளிப்படுத்தவும் இயல்வதொன்ருயிருப்பினும் துய்ப்பு உணர்வற்ற நிலையில் இயங்கும். சிற்சிலகால் நாம் மகிழ்வூட்ட மகிழ்தலும், சினமுட்ட அழுங்குதலும் செய்வது யாங்ஙன் எனின், அது கருவிகளின் இயல்பூக்கத்தால் ஏற்படும் உந்து உணர்வு ஆகும் என்க.

இனி மனம் நினைவலைகளை வாங்குமிடத்து நெஞ்சம் என்றும், நினைவலைகளை வெளிப்படுத்துமிடத்து உள்ளம் என்றும், தன்னை

நிலைப்படுத்திக் கொள்ளுமிடத்து மனம் என்றும் பெயர்பெறும். மன வலைகள் உள்ளத்தே மோதுறுமிடத்து நினைவு என்றும், மனவலைகள் உள்ளத்தினின்று வெளிப்படுமிடத்து உன்னல், எண்ணல் என்றும், நிலைப்பேறுறுமிடத்துக் கருதல், மன்னுதல் என்றும் பெயர்பெறும்.

இனி, மனமென்னும் அகவுறுப்பு உயிர்த் தொடக்கத்தே நெஞ்சமாக அலர்ந்து, உள்ளமாக மலர்ந்து, மனமாகப் புலரும் தன்மையது. அலர்தல் மொக்கு, முகையாதல்; மலர்தல்–விரிதல், மலர்ச்சியுறுதல்; புலர்தல்–ஒளிபெறுதல், தெளிதல். இனி நெஞ்சமாக வெளிப்பாடெய்திய மனம், நினைவு மிகமிக உள்ளமாக மலர்கிறதென்றும், உள்ளமாக மலர்ந்தபின்னரே நினைவலைகளை வெளிப்படுத்தும் ஆற்றல் பெறுகின்றதென்றும், அவ் வாங்கு ஆற்றலும் போங்குஆற்றலும் வலிவுற்ற பின்னர்தான் புறவிளக்கம் நிறைவுற்று அகவிளக்கம் கால் கொள்ளும் என்றும், அது பின் நிறைவுற நிறைவுறத்தான் மனம் ஒளிபெற்றுத் தெளிவடையும் என்றும் கண்டுகொள்க.

இனி, முதற்கண் நெஞ்சு நினைவை வாங்குந் தன்மையதாக விளங்குமன்றி நினைவை வெளிப்படுத்தும் தன்மையதாக இராது. பெரும்பாலான மாந்தர் வாங்குகின்ற நெஞ்சினரே. அவர் தம் நெஞ்சகத்துப் படிகின்ற நினைவலைகள் அவருடையனவல்ல. நினைவலைகளை எழுப்பவல்ல உள்ளம் கொண்டார்தம் அழுந்திய உணர்வால் எழுப்பப் பெற்ற அலைகளாகும். இவ்வலைகளைத் தமக்குற்ற எண்ணங்களாகக் கொள்வர் அப் பேதையர். இவ்வாறு பிறர்தம் நினைவலைகளால் மோதுறப்பெற்ற நெஞ்சம் அவ்வலைகளினின்று பெறப்படும் அறிவுணர்வான் பற்றப்பெற்று வளர்ச்சியுற்றுத் தாமே அத்தகைய நினைவலைகளை வெளிப்படுத்தவல்ல ஆற்றலுறுகின்றது. அதுகாறும் நுழைவாயில் ஒன்றே திறக்கப்பெற்ற நெஞ்சத்திற்குப் பின்னர் வெளிவாயிலும் திறக்கப்பெறும். அவ்வினைப்பாடும் நிறைவுற்றபின் உள்ளம் தன்னைத்தானே உள்நோக்கவல்லது. அக்கால் மனமென்னும் பெயர் பெற்று நிலைப்பேறுபெறும். இது தன்னை அகநோக்கிப் பார்க்குந் திறமுடையதாகலின் அகம் என்னும் சிறப்புப்பெயர் தாங்கப்பெற்றதென்க. இக்கால் மனம் குவிதலுறும். இதுவரை மனவுணர்வோடு அகன்று வளர்ந்த அறிவும் இக்கால் குவிதலுறும். இதனையே அஃகிய அறிவு என்பர் திருவள்ளுவர். அறிவனதும், மனத்தினதும் பிறவாந் தன்மைகளை தேவையுற்ற விடத்து மீண்டுங் கூறுவாம்.

ஈண்டு முதற்கண் பிறருடைய நினைவுகளை வாங்கும் தன்மையுடைய தாகலின் நெஞ்சு எனப் பெற்றது. அது தான் வாங்கும் நினைவே தன்னை வளர்த்துக் கொள்ளப் போகும் உணர்வு மரத்திற்கு வித் தாக அமைதலின் நினைவு வித்து எனப் பெற்றது. வித்து ஊன் றப் பெறுதற்கு அமைந்ததாகலின் இவ்வகவுறுப்பு நிலமென்று கொள் ளப்பெற்றது.

நெஞ்சும், நிலமும் 'நில்' என்ற ஒரேயடியாகப் பிறந்த இரு சொற்கள்.

வித்து–'விள்' என்னும் வேரடியாகப் பிறந்த சொல். விள்ளுதல்–விளங்குதல்–வெளிப்படுதல்–வெடித்தல்–மலர்தல்–விரிதல்–விளங்குதல்–வேறுபடுதல் முதலிய வினையொழுங்கை நிரல்பட உணர்த்தும் ஓர் அரிய சொல். விள் + து–வித்து. வெளிப்படக் கூடியது; விரிவடையக் கூடியது–விளங்குந் தன்மையது; மலருந்திறத்தது; இதனின்று பிறி தொன்ருய் வேறுபட்டு வேறுபட்டு வளருந் தன்மையது என வரும் பல பொருள்களை உள்ளடக்கிய ஒரு சொல்லும் அச்சொல்லுக்குரிய பயனுமாகும்.

வித்துக்கு மூலம் விள், அதன் மூலம் பிள். பிள்–பிளவுற்றுப் பிரியும் தன்மையது.

பிள்–பிள்ளை (தாயினின்று பிரிவது).; பிளவு–ஒன்று இரண்டாதல்

பிள்–பிண்–பிணம்–உயிர்வேறு மெய்வேருய்ப் பிரிதல் நிலை–உயிர்பிரிய எஞ்சிய உடல்.

பிள்–விள்–வெள்–ஒள்; பிள் + து–பித்து; விள் + து–வித்து; வெள் + இ–வெளி; ஒள் + இ–ஒளி.

ஒளி வடிவாயும், வெளி விரிவாயும், வித்து நிலையாயும் பித்து நிலையாயும் நிற்கும் புடவியின் மூலக் கரு வித்தும் பித்தும் ஆகும்.

வித்து–வித்தன்–வித்தகன். பித்து–பித்தன்–பிச்சன்–பிஞ்சகன்–பித்தகன் என வெளிப்படும் இறைப் பொருளுணர்த்தும் மூலச் சொற்களை ஓர்க.

இனி, வெளிப்படும் தன்மையுடைய பொருள்கள் யாவும் சூடுறதல் வேண்டுமாதலின் வித்தென் சொற்கும், பித்தென் சொற்கும் சூட்டுப் பொருள் உண்டு,

வித்து–விந்து–சூடும் ஒளியும் சான்ற மூலப் பொருள்.

பித்து–பித்தம்–சூடு. பித்து–பிச்சு–உடலிற் சூடு எழுப்பும் உள்ளுறுப்பு.

இவ்வுலகத்துத் தோன்றிய நுண்ணியதோர் அணுவிலும் இப் புடவியின் (பிரபஞ்சம்) விளக்கம் இருப்பது அண்டபிண்ட உண்மையாகும். அண்டம் பல நிறைவது அகண்டம். அண்டம் பிளவுற நிற்றல் பிண்டம். அண்டத்தின் மூலம் அணு. இவ்வுண்மைகள் போலவே இவ்வுலகத்தின்கண் தோன்றி விளங்கும் அணுத்திரளையாகிய மாந்தனும், அவனின்று வெளிப்படும் உணர்வுகளும், அவை யுணர்த்தும் ஒலிகளும், அவையடங்கிய சொற்களும், அவை நிரம்பிய மொழிகளும் இவ்வுலக உண்மைகளைப் பல்வகையானும் பறைசாற்றி நிற்கும் பிண்டப் பொருள்களே ஆகலின், இவை வழிபாகவும் இவ்வண்ட உண்மைக்ள் உணரப் பெறுதல் கூடும் என்று அறிக. இனி முதுமொழியாம் நம் மூத்தமிழ் மொழியோ மாந்தன் கலப்புறு உணர்வினனாகிக் காடு மேடுகளில் சுற்றியலையும் காட்டுமிராண்டியாக, எவ்வகைத் தன் முயற்சியும் இன்றி, இப்பேரியற்கையின் உணர்வலைக்குள் ஒடுங்கி நின்ற காலத்தே தோன்றிய மொழியாதலின், இம்மொழி ஒன்றின் கண்ணேயே இவ்வியற்கையின் உண்மைகள் நிரப்பப் பெற்றிருத்தலையும், இஃதன்றிப் பிறவெல்லா மொழிகளும் மாந்தன் தன்னுணர்வு மிகப் பெற்று உணர்வு வெளிப்பாட்டுத்திறம் பெற்ற கலப்புணர்வுக் காலத்தே தோற்றுவிக்கப் பெற்றவாகலின், அவற்றுள் கால நிரலாகவும், கருத்து நிரகலாகவும் இயற்கையல்லாப் படைத்து மொழிதலாகிய சொற்கள் நிரப்பப் பெற்றிருத்தலையும் மெய்யறிவினுல் கண்டு கொள்க.

படைத்து மொழிதலாவது, அரிசியைச் சோறுக்கல், மாவாக்கல், கூழாக்கல், அவித்துப் பிட்டாக்கல் போன்ற இயற்கைமேல் மாந்தன் தன்னுணர்வால் அமைத்துக்கொண்ட செயற்கை வினைப்பாடுகள் போல், இயற்கை மூல உணர்வொலிகளைக் கூட்டியும் குறைத்தும் நெளித்தும் சுழித்தும், நலித்தும் படைத்துக் கொண்ட சொற்களும் அவற்றைக் கூட்டுற மொழிதலுமாகும்.

தமிழ் வெல்க!

தமிழ்வரலாற்று, தமிழ்க்கழக அமைப்பு மாநாடுகளின்

அழைப்பிதழ்.

நிகழும் திருவள்ளுவராண்டு 1999 கன்னி (புரட்டாசி) மீ 19, 20-ஆம் பக்கல் (தேதி) (5, 6-10-68) காரி (சனி), ஞாயிறு ஆகிய இருநாட்களிலும்

திருச்சித் தேவர் மன்றத்தில்

மேற்குறித்த இரு மாநாடுகளும், மொழிநூல் மூதறிஞர்

புலவர் ஞா. தேவநேயப்பாவாணர், மு. க. அவர்கள்

தலைமையில் முறையே நடைபெறும்.

அன்று, தமிழன் பிறந்தகம், தமிழ் நெடுங்கணக்குத் தோன்றிய காலம் திருவள்ளுவர் காலம் தொல்காப்பியர் காலம். முதலியவை அறுதியும் இறுதியும் உறுதியுமாக முடிவு செய்யப்பெறும்.

தமிழகம் முழுதும் தழுவியதும் கட்சிச்சார்பற்றதும் மாவட்டந் தொறுங் கிளை கொண்டதும் இனிமேல் தமிழைக்காக்கும் முழுப் பொறுப்புந் தாங்குவதுமான தமிழ்க் கழகமும் அமைக்கப்பெறும்.

தமிழன்பர் அனைவரும் தவறாது வந்து தமிழின் தொன்மை முன்மைகளையும், தாய்மை தூய்மை முதலிய பிற அருமை பெருமைகளையும் தெள்ளத் தெளியத் தெரிந்து அறியாமையும் அடிமைத்தனமும் அறவே நீங்கி முன்னேற்ற வழிச்சென்று முன்னோர் உயர்வை மீண்டும் பெறுவாராக.

இங்ஙனம்,

விழாக் குழுவினர்.

திருச்சி மாவட்டத் தமிழ்க் கழகம்.

(22ஆம் பக்கத் தொடர்ச்சி)

எனவேதாம் நம் முதுமொழித் தமிழ்ச் சொற்கள் மெய்யறிவு பூட்டப்பெற்ற இயற்கைப் பெட்டகங்களாக உள்ள நிலையைத் தெற்றெனத் தெளிந்து தேர்க.

இனி, பிற வெளிப்பாட்டு நிலைகளினின்று வெளியேறிவரும் வலிந்த நினைவலைகளே நமக்கு வித்தாக அமைந்து நாளடைவில் முளைவிட்டு அறிவாக வளருமென்று கொள்க. இனி அவ்வறிவு பகுத்தறிவாயும், அதன்பின் மெய்யறிவாயும் மலருமென்க. இம் மூவகையறிவும் வளர்தலுக்குற்ற நிலன் இந்நெஞ்சே என்பது இப் பாட்டின் முதலடியால் விளக்கப் பெற்றது. (தொடரும்)

திருச்சிராப்பள்ளியில்

இருபெரு மாநாடுகள்.

1. தமிழ்வரலாற்று மாநாடு (5-10-68)

நிகழ்ச்சி நிரல்.

புலவர். ஞா. தேவநேயப்பாவணர், மு. க. (தலைவர்)

திரு. அழகவுடையார், குடந்தை	–தமிழ்த்தாய் வாழ்த்து.
திரு. நா. செல்வராசனுர்	–வரவேற்புரை.
தவத்திரு. குன்றக்குடி அடிகளார்	–தொடக்கவுரை.
பேரா. சொக்கப்பனுர்	–"தமிழன் பிறந்தகம்"
பேரா. கோ. நிலவழகனுர் (இராமச்சந்திரனுர்)	–' திருவள்ளுவர் காலம்"
பர். மெ. அழகனுர் (சுந்தரம்)	–"தமிழ்நெடுங்கணக்கின் தோற்றம்"
திரு. பெருஞ்சித்திரனுர் (தென்மொழி ஆசிரியர்)	–"தமிழின் வளர்ச்சிக் கான தடைகள்"
திரு. செ. முத்து அடிகள்	–நன்றியுரை.

இரவு 8-மணி முதல் 10-மணி வரை
குடந்தை. திரு. அழகவுடையார், புலவர். நெறிமுடியார்
ஆகியோரின் இசையரங்கு நடைபெறும்.

2. மாநிலத் தமிழ்க்கழக அமைப்பு மாநாடு (6-10-68)

தலைவர்:

புலவர். ஞா. தேவநேயப்பாவணர், மு. க.

திரு. ம இலெ. தங்கப்பனுர், பேரா. மறை. திருநாவுக்கரசு. திரு. இறைக்குருவனுர், புலவர். வி. பொ. பழனிவேலனுர், புலவர். முத்துக் குமராண்டார், புலவர். பொன்னம்பலனுர், திரு இல. மறைமலை, திரு இளவழகன், திரு. சே. மா. நிலவழகன் ஆகியோர் பேசுவர்.

விழாக்குழுவினர்,

திருச்சி மாவட்டத் தமிழ்க் கழகம்.

என் இயக்கம் பற்றிய சில விளக்கங்கள்.

-பெருஞ்சித்திரன்-

இது தற்புகழ்ச்சிக்காக எழுதப்பெறுவது அன்று. தன் தேவையை நிறைவு செய்து கொள்வதற்காக எழுதப்பெறும் அகநிலை வெளிப்பாடும் அன்று; தென்மொழிக் குடும்பத்தாரின் விளம்பரமும் அன்று; எந்த ஓர் இரு கால எல்லைகளுக்குட்பட்ட வரலாறு மன்று; உண்மையிலேயே, தென்மொழி இயக்கச் சுழற்சியில் என்னை நானே ஒப்படைத்துக் கொண்ட துயர மூட்டத்தின் மூச்சுத்திணறல்கள்! மெய்யாகச் செய்யக் கருதிய பொதுத் தொண்டின் கனப்புக் கொப்புளங்கள்! பழம் பெருமை வாய்ந்த இத்தமிழக மண்ணின் சார மாற்றங் குறித்த துயரச் செய்திகள் இவை! தன்னலமற்ற பொதுவுணர்வு மணிகளை உண்மை என்ற பொன்னிழையில் கோப்பதற்காக நான் எடுத்துக் கொண்ட முயற்சிகளுக்கிடையில் ஏற்பட்ட நிலநடுக்கங்கள்! இருள் மூட்டங்கள்! எனவே தென்மொழியின்பால் அக்கறையையும், பொதுவுணர்வில் தம் வாழ்வியக்கங்களையும், தந்நலமறுப்பில் தம் நினைவுச்சுவடுகளையும் பதித்துக்கொண்டு எங்கோ வாழ்ந்து கொண்டிருக்கும்—என்னையறியாத—தென்மொழியை உணராத தமிழன்பரும், என் அண்மையிலேயே வாழ்ந்து கொண்டிருப்பதுடன், என் புதிரான இயக்கம் பற்றி ஒருசிலகால் அறிந்ததாக மகிழ்ந்தும், ஒரு சில பொழுது அறியாதிருக்கின்றமைக்கு மறுகியும், மூச்சுமுட்டவாழ்ந்து கொண்டிருக்கும் என் மனைவி மக்களும், என்னை அண்மி என் இயக்கங்களுடன் தம் இயக்கங்களை மோதுவித்துக் கொண்டு, அவரவர் மென்மை வன்மைகளுக்கேற்ப, இன்ப துன்பங்களைப் பகிர்ந்து தம் தம் தந்நல நோக்கங்கள் நிறைவேறுமற் சென்ற—செல்லவிருக்கின்ற அன்பர்களும்—இதனை ஊன்றிப் படிக்க வேண்டிக் கொள்கின்றேன்.

இதுபோன்ற ஒரு கட்டுரையை நான் எழுதுவேன் என்று தொடக்கத்தில் எண்ணவில்லை. என்னைப்பற்றி நானே எழுதிக்கொள்வது, எந்த அளவீட்டைச் சார்ந்ததாயினும், பிழையாகக் கருதப் பட்டு விடுமே என்ற அச்சத்தால் அன்று; அல்லது என் உருவம் பிறர் எடுத்த புகைப்படத்தில் எவ்வாறு விழுந்திருக்கின்றது என்பதையே நான் பார்க்க விரும்பினேன் என்பது மன்று; தேவையான விடத்து என்னைப்பற்றி நானே சொல்லிக் கொள்வதும், அது பிறர் சொல்லுவதைவிட ஓரளவு சிறப்பும் உண்மையும் வாய்ந்ததாக

இருக்கும் என்பதும் பிழையாகாது என்றே நான் கருதினேன், கருது கின்றேன். காரணம், பொருள்களை மெய்யூட்டம் நிரம்பிய கூரிய பார்வையுடன் என் கண்கள் நோக்குவது போல், என் அண்டை அயலிலுள்ளவரின் கண்கள் நோக்காததை நான் என்னை அண்டி யிருந்த எல்லாரிடத்தும் கண்டிருக்கின்றேன்; உள் மனங்களையும் ஊடுருவிப் பார்க்கும் என் உள்ளுணர்வுக் காந்த வயல்வெளி, அவர் களைப் பொறுத்தமட்டில் அவ்வளவு அகன்று பரந்திருப்பதாக நான் உணரவில்லை. அவர்களின் செவிகளுக்குப் படாத ஓசை எனக்குப் படுவதை அவர்களுக்கு மணிக் கணக்காக விளக்கி உரைத்திருக் கின்றேன். அவர்கள் மனவிழி படித்தறியாத எத்தனையோ பாடங் கள் அவர்கள் முன் படிக்கப் பெற்றன. ஒருவேளை அவர்கள் என்னை விட மேம்பாடு அடைந்த புலன் உணர்வுகளைப் பெற்றிருந்தார்களா ஞல் நான் அவர்களைப் பின்பற்றி நடையிட்டிருப்பேன். ஆனுல் என்னை முழுவதும் மகிழ்வித்த ஒரு கதை யாசிரியனே, கட்டுரையாசிரியனே சொற்பொழிவாளனே, அறிஞனே இன்றுவரை என் கண்களுக்கும் காதுகளுக்கும் கைகளுக்கும் எட்டவே இல்லை; என்னை முழுவதும் நிறைவு செய்த நூல் இதுவரை ஒன்றுமே இல்லை. நூலகங்களில் அடுக்கி வைக்கப் பெற்றிருக்கும் நூல்கள் சிலவற்றின் மேல் தடவிக் கொடுத்திருக்கினறேன; சிலவற்ரேடு பேசியிருக்கின்றேன; சிலவற் ரேடு சிறிது நேரம் வாழ்ந்திருக்கின்றேன்; ஆனுல் எந்த நூலையும் நான் இதுவரை என் ஆசிரியனுகத் தேர்ந்தெடுத்துக்கொள்ள முடிய வில்லை. அவற்றில் ஒன்ருகிலும் அல்லது முழுவதாகிலும் என் உடல் அணுக்களில் அரைப்பகுதி யணுக்களின் அறிவு வேட்கையையேனும் இன்றுவரை தணிக்கவே இல்லை. என் தொண்டைக்குழி நிரம்பும் உணவுகளையே இன்றுவரை எந்த நூலும் எனக்குப் படைத்திருக்கின் றது. அறிவு வயிற்றை நிரப்பி அலைமோதிக் கொண்டிருக்கும் என் உடலின் உள்ளுணர்வணுக்கள் ஒவ்வொன்றின் அங்காந்த வாய்க்கும் வயிற்றுக்கும் போதுமான உணவு ஒரே இடத்தில் கிடைத்து விடும் என்றும் நான் கருதவில்லை. பறந்துகொண்டே திரியும் நிலாமுகிப் புள் ஆங்காங்கே விசும்பினின்று நழுவி விழுகின்ற மழைத்துளிகளை மாந் திக்கொண்டே போவது போல், என் உள்ளமும் அறிவும் இந்நிலத்தில் தம் கால்களை ஊன்றிக்கொண்டே விசும்பளாவி நீள்கின்றன; அறிவுத் துளிகளை விழுங்குகின்றன. எனினும் அவை என்றும் பசி தணிவதில்லை. விழுங்கப்பெறும் ஒவ்வோர் அறிவுத் துளியும், மேலும் மேலும் எரிமலை போல் வெடித்துக் கக்கும் தீப்பசியையே எழுப்பி விடுகின்றது. இந்நிலையில் எந்தத் தனிநூலேனும், நூலாசிரியனேனும், தலைவனே

னும் நான் பின்பற்றிச் செல்லத்தக்க பாதையை இட்டுத்தந்தான் என்று நான் எப்படிச் சொல்வது? இதுவரையில் என் கண்களில் பட்டபழுதில்லாத முழுவடிவம் ஒன்றுமில்லை. ஆரக்கால் நிறுத்திப்பிழையின்றி வரையப் பெற்றனவாகப் பிறர் காட்டும் வட்டங்கள்கூட என் கண்களுக்கு ஆயிரம் கோணல்கள் உடையனவாகப் படுகின்றன. பழுதற வரைந்த ஓவியம் ஒன்றையேனும் இதுவரை நான் பார்த்ததிலை; பழுதறச் செய்த பொருள் ஒன்றையேனும் ஒருவனேனும் இதுவரை எனக்குக் காட்டியதில்லை. இயற்கையின் ஒரு துணுக்கில் அமைந்து கிடக்கும் ஒழுங்கு, அழகு, நுட்பம் போன்றவற்றை மாந்தன அமைத்துக் கொண்ட மலையத்துணை ஆக்கங்கள் ஒன்றிலேனும் இதுவரை கண்டு நான் நிறைவுகொண்டதில்லை. நான் பார்த்திராத விசும்பின் கருநிறம், வான வெளியின் ஒளிச் சிதறல்கள், விண்மீன்களின் கண்சிமிட்டல்கள் போன்றவற்றின் உண்மை அளவை, உருசிய விண்வெளி மறவன் காகரின் கூற்றாலும் அறிந்து நிறைவு பெற முடியவில்லை.

இவ்வாறு நான் கூறுவதால் என் படைப்புருவம், இவ்வுருவத்துக்குள் இயங்கும் 'நான்' என்ற தற்சார்பு உயிரியக்கம், அது வெளிப்படுத்துகின்ற உணர்வலைகள், அது தனக்கெனப் படைத்துக் கொண்ட 'என் உடல்' எனப்படும் இக் குடியிருப்பு, அது தனக்கெனத்திறந்து வைத்திருக்கும் 'கண்கள்' எனப்பெறும் என் பார்வைப் பலகணிகள், மூக்கெனும் காற்றுவாரி, 'காதுகள்' என்னும் ஒலி வாங்கிகள், 'வாய்' என்னும் ஒலிபரப்பி முதலிய கருவிகள் யாவும் செப்பமாக அமைந்துள்ளன என்றும் கூற முடியவில்லை. என் 'நான்' அமைத்துக்கொண்ட என் உடலிலேயே எனக்கு நிறைவு படவில்லை என்பதை நான் வெட்கத்துடன் ஒப்புக்கொள்ள வேண்டியுள்ளது. என் கருத்துகள், என் எழுத்துகள், என்பேச்சுகள், என் மூச்சியக்கம் யாவும் சிற்சிலகால் கோணல் மாணலாக இயங்குவதை என் அகவுணர்வு எனக்குப் புலப்படுத்தியுள்ளதை நானே அறிந்து அவற்றையும் என் அண்டை அயலிலுள்ளவர்களுக்கு ஒலிபரப்பியுள்ளேன். என் படைப்பில் நானே நிறைவடையாதவன். எனக்குக் கொடுக்கப்பெற்ற கருவிகளின் மழுக்கங்களுக்காக நானே இவ்வியற்கையுடன் போராடிக் கொண்டிருக்கின்ற நேரங்களுண்டு. என் கையில் உள்ள தூவலை நானேதான் தேர்ந்தெடுத்துக் கொண்டேன். எனினும் என் எண்ணப் புயலால் அதன் கூர்யமுனை நெளிந்தும் சுழிந்தும், கோணலுறுவதைத் தடுக்க முடியவில்லை. முங்கிய வல்லுணர்வின் வேகந்தாளாது இத்தூவலின் முள்முனை சிற்சிலகால்

ஒடிந்து விடுவதும் உண்டு. எனவே ஒடியாத, எழுதிக்கொண்டே இருக்கின்ற, மழுக்கமெய்தாத, என் ஓட்டத்திற்குத் தத்தளிக்காத, என் உணர்வு அலைகளின் நுனிவரை களைப்பின்றி நீந்திச் செல்லுகின்ற ஒரு தூவலுக்காக நான் அலைந்து கொண்டிருக்கின்றேன். அப்படிப்பட்ட ஓர் எழுதுகோலை என்னாலும் படைத்துக்கொள்ள முடியவில்லை; இதுவரை எவராலும் படைக்க முடியவில்லை. என் பார்வையெலாம் எழுத்தானால், என் உணர்வலைகளெல்லாம் ஓவியங்களானால்...ஆ! அத்தகைய நிலை எனக்கு ஒருபோதும் வரப்போவதில்லை.

இவ்வாறு எனக்கு நானே நிறைவளித்துக் கொள்ளாத அறிவுணர்வைப் பெற்ற என் உயிர்க் கூறுபாட்டை நான் உங்களுக்குச் சொல்ல முயலுகின்றேன் என்பதால், அதிலும் நான் நிறைவு பெறுவேன் என்று சொல்ல முடியாது; என் எழுத்துகள் நிறைவுற்றிருப்பன என்றும், என் பாடல்கள் முழு அழகுடன், உணர்வுச்சூட்டுடன் வடித்தெடுக்கப் பெற்றன என்றும், என்முன்னர் அன்பர் பலரும், அறிஞர் பலரும் கிசுகிசுக்கும் மொழிகளால் சிற்சிலகால் என் செவிகளில் தென்றலை வீசச் செய்துள்ளனர். ஆனால் உண்மையாகச் சொல்கின்றேன்; அப்பேச்சுகள் என உயிர் அணுக்களில் ஒன்றையேனும் இதுவரை நிறைவு செய்ததில்லை. என் முகம் அக்கால் நசுங்கி போனதை அவர்கள் கண்டிருக்க முடியாது; என் உள்ளம் அச்சொற்களால் சுருங்கிப் போனதையும் என் உயிர்ச்சாரம் புளித்துப் போனதையும் அவர்கள் அறிந்திருக்க வழியில்லை. புகழுக்காகவே ஏங்கித் திரியும் அவர்தம் வாய்கள், செவிகள் எங்கே? அறிவுக்காகவே ஏங்கிப் பறந்து களைத்துக் கிடக்கும் என் உயிரணுக் குவியலின் இயக்கம் எங்கே? மொதததத்தில் எனக்கு நானே பொந்திகை செய்ய முடியாதவன். என் சமையல் எனக்கே நிறைவளிப்பதில்லை. ஆனாலும் அவற்றாலும் பிறர் மகிழ்வுறுவதையும், பொந்திகையுறுவதையும், பசியாறுவதையும் கண்டிருக்கின்றேன். இருப்பினும் அவர்களுக்கு இன்னும் சுவையான சமையலையே—எனக்கே நிறைவளிக்கக் கூடிய சமையலையே இன்னும் செய்ய முயன்று கொண்டிருக்கின்றேன். என் உணவுக்கடைக்கு வந்து பசியாறும் 'மாந்தர்' என்னும் உயிர்த்திரளைகளுக்கு இன்னும் பசியும் விளங்கவில்லை; சுவையும் தெரியவில்லை; உணவும் கிடைக்கவில்லை என்று மட்டும் எனக்குத் தெரியும். இருப்பினும் நான் எனக்காகச் சமைத்துக் கொண்டதையே அவர்களுக்கும் படைக்கின்றேன் என்பதை அவர்கள் அறியார். அவர்களுக்காக என்

படைப்புகள் அல்ல; எனக்காகவே என் படைப்புகள். ஆனால் அவை அவர்களுக்கும் உரியவை; சொந்தமானவை.

இவ்வாறு என்னிலும், என் வெளிப்பாட்டிலுமே எவ்வகை நிறைவும் பெறமுடியாத நான, பிறரால் எவ்வாறு நிறைவுற முடியும்? முடியவே முடியாது; எக்காலும் முடியாது. இறைவன் இனனும் தன் படைப்பில் நிறைவுகாண முடியவில்லை; எனவே உலகம் இயங்கிக் கொண்டுள்ளது! நிறைவுகண்டால் தன் இயக்கத்தை முடித்துக்கொள்வது திண்ணம். சிறகார்ந்து அளாவிக்கிடக்கும் இவ் வளப்பரிதாம் பெரும் புடவி (பிரபஞ்சம்) விரிந்துகொண்டே உள்ளதாக அறிவியல் அறிஞர்கள் கூறுகின்றனர். உண்மையில் அதுவிரிந்து கொண்டிருக்கவில்லை; தன்னால் தானே நிறைவடையாமல் தன்னிறைவு நோக்கிப் பறந்து கொண்டுள்ளதாக, தன் அகன்ற கைகளைத் துழாவுவதாகவே நான் கருதுகின்றேன். தோற்றம், படைப்பு, உருவாக்கம், நிறைவு, ஒடுக்கம் என்ற அறுவகைத் தொழிற்சுழற்சி நடைபெறுவதாக என் உணர்வு எனக்குப் புலப்படுத்துகின்றது. இவ்வொழுங்கு பட்ட இயக்கங்களில் நானும் நீங்களும் எவ்வெவ்வாறு தொடர்புண்டோம்? எவ்வெவ்வாறு வேறுபட்டோம்? ஏற்பட்ட தொடர்பிற்கும் வேறுபாட்டிற்கும் இடைவெளி என்னென்ன? என்று ஒருவாறு நானறிந்தவற்றை உங்களுக்குச் சொல்லப் போகின்றேன். இவ்வாறே நீங்களும் சொல்லக்கூடும்; எழுதக்கூடும். ஏரணமுறையில் அளவை (வாதப் பிரதிவாதங்கள்) யாடுதலும் கூடும்; சிலவற்றை ஒப்புக்கொள்வீர்கள்; சிலவற்றைக் கண்களில் கனல் தெறிக்க மறுத்துக் கூறுவீர்கள். ஆனால் உங்கள் உணர்வும், ஓசையும், அலப்புதலும், ஆரவாரமுமே உங்களை யாரென்பதைத் தெள்ளத்தெளிவாக அறிவோர்க்குக் காட்டிவிடும்; அவ்வாறு அவற்றை அறிந்துகொள்ள முடியாதவர்கள் இன்றுவரை எவருமே இல்லாதிருக்கலாம்; ஆனால் இனி வருங்காலம் அத்தகையவர்களைக் கட்டாயம் தோற்றுவிக்கத்தான் போகிறது. அக்காலத்து எழுப்பப்பெறும் மீமிசை மாந்தக் கல்லறையுள் புதைக்கப் பெறும் முதல் ஆளாக நான் இருக்க முடியாவிட்டாலும், பொதுவான மாந்தரினத்தின் கடைசி ஆளாகவேனும் இருக்க விரும்புகின்றேன். ஏனெனில் இனியேனும் ஒளியுலகம் வரட்டும்!

–தொடரும்

எழுத்தாளன் யார்?

(கு. ஐந்தெழுத்தன், க. இ., கீ க. இ.)

வாள் ஏந்திய அனைவரும் மறவர் ஆகார்; தூரிகை பிடித்த எல்லோரும் ஓவியர் ஆகார்; இவ்வாறே எழுதுகோல் எடுத்த எல்லோரும் எழுத்தாளரும் ஆகார்.

எனவே, எழுத்தாளனுக்கென்று சில இயல்புகள்—சில தகுதிகள் உள்ளன. அவற்றை உடையவனே எழுத்தாளன் ஆவான். அவை யாவை என இங்கு ஆராய்வோம்.

எழுத்தாளனைப் பற்றிப் பேசும்போது நாம் முதற்கண் நினைவு கூரவேண்டுவது ஒன்றுண்டு.

எழுதுவது வேறு; எழுத்தாள்வது வேறு. எழுதுவதற்கு ஒரு மொழியின் நெடுங்கணக்கு மட்டும் தெரிந்திருத்தலே போதும்; ஆனால் எழுத்தாள்வதற்கு அதுமட்டும் போதாது. அம்மொழியின் சொல்லமைப்பு, ஒலிமுறை இலக்கண விதிகள், புறனடைகள், மரபு போன்ற அனைத்தும் தெரிந்திருத்தல் வேண்டும்.

எழுத்தாளன் என்ற சொல்லில் 'எழுத்து' என்பது மொழி நடையைக் குறிக்கிறது. அஃதாவது, ஒருவன் தன் கருத்துக்களைப் புலப்படுத்துவதற்குக் கையாளும் பலவகைப்பட்ட சொற்கள், தொடர்கள் ஆகியவற்றின் தொகுதியாம். எனவே, ஒரு மொழியின் பலதிறச் சொற்களையும், பல்வேறு தொடர்களையும் அறிந்திருப்பது எழுத்தாளனுக்கு உரிய முதல் தகுதியாகும். ஆதலின், எழுத்தாளன் என்பவன், தான் எழுதவிரும்பும் மொழியின் இலக்கணத்தைச் செம்மையாக அறிந்திருத்தல் இன்றியமையாததாகும்.

வழக்குச்சொல், செய்யுட்சொல்; இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்று சொற்களைப் பாகுபடுத்தியறிந்து, அவற்றை இடமறிந்து ஆளும் (அல்லது விலக்கும்) தன்மையில்லாதவனை எழுத்தாளன் என்று எவ்வாறு கூறுதல் இயலும்? இவ்வாறே, எழுவாய்த்தொடர், வினைமுற்றுத் தொடர், பெயரெச்சத் தொடர், வினையெச்சத்தொடர் போல்வனவும், தனிநிலைத் தொடர் (Simple Sentence), இணைநிலைத்தொடர் (Compound Sentence), கலப்பு நிலைத் தொடர் (Complex Sentence) எனபனவும் ஆகிய தொடர்ப் பாகுபாடு அறியாதவன், அவற்றை எவ்வெவ்வகைப் படைப்புகளுக்குக் கை

யாளுதல் வேண்டும் என்று தெரியாதவன் எப்படி எழுத்தாளன் ஆதல் கூடும்? இலக்கியக் கட்டுரைக்கு ஏற்றதெனப்படும் நடை புனைகதைக்குப் பொருந்தாது. புனைகதைக்குப் பொருந்துவது நாடகத்திற்குத் தகுந்தது ஆகாது எனவே, தன் படைப்புக்கு ஏற்ற நடைக்கு உகந்த சொற்களையும் தொடர்களையும் கையாளும் தன்மை சிறந்த எழுத்தாளனுக்கு உரிய முதல் இலக்கணம் ஆகும்.

அடுத்து, தன் எழுத்து நடையை அழகுபடுத்துவதற்கேற்ற பல வழிவகைகளைக் கையாளுவதும், சிறந்த எழுத்தாளனுக்கு ஓர் அடையாளம் ஆகும். உவமை, உருவகம் போன்ற அணிவகைகளையும், சுருங்கச்சொல்லல், விளங்கவைத்தல் போன்ற நுட்பங்களையும் ஏற்ற பெற்றி மேற்கொள்ளுதல் நன்று.

அன்றியும், தன் எழுத்து நடை தூய்மையாக இருக்குமாறு அதனை ஆளுதலும் எழுத்தாளனுக்குரிய தகுதிகளில் ஒன்றாகும். கொச்சைச்சொல், இழிந்தசொல், சிதைந்தசொல், தமிழ்வடிவம் பெறாத வடசொல் ஆகியவற்றைக் கலந்து எழுதுவது மொழிநடையைப் பெரிதும் கறைப்படுத்துவதாகும். இயன்ற அளவு தனித்தமிழ் நடையைப் பின்பற்றுவது இலக்கிய எழுத்தாளனுக்கு (Ideal writer) ஓர் அணிகலன் எனலாம். எனவே, தான் எழுதும் மொழியினிடத்து உண்மையான அன்பும் பற்றும் கொண்டிருப்பது எழுத்தாளனுக்கு இன்றியமையாத பண்பாகும்.

மேலும், தன் எழுத்தை உயர்ந்த நோக்கங்களையும், கொள்கைகளையும் விளக்குவதற்கென ஆளுதலும் எழுத்தாளனின் நல்லியல்புகளில் ஒன்றாகும். ஓவியன் எந்தக் காட்சியையும் தீட்டிக்காட்டலாம்; பாவலன் எந்தப் பொருளைப் பற்றியும் பாடலாம்; எழுத்தாளனும் எந்தத்துறை பற்றியும் எழுதலாம். ஆனால், மக்கள் உள்ளத்தில் அவன் எழுத்து நெடுங்காலம் நின்று நிலவுதல் வேண்டும் எனின்—அழியா வாழ்வு பெறுதல் வேண்டுமெனின், அவன் எடுத்துக்கொள்ளும் பொருள் சிறந்ததொன்றாக, விழுமியதாக இருத்தல் வேண்டும். திரு. வி, கல்யாணசுந்தரனார், திரு. மறைமலையடிகளார் போன்றோர் எழுத்துலகத்தில் நிலைத்த புகழ் பெற்றதற்கு இதுவே காரணம் ஆகும்.

இனி, தன் எழுத்துத்திறனை இலக்கணம், இலக்கியம், சிறுகதை, புனைகதை, நாடகம், அறிவியல் (Science) பொருள்-நிலை, வரலாறு,

அரசியல், மொழியியல், உளவியல், மெய்ப்பொருளியல் போன்ற பல்வேறு துறைகளிலும் ஆளும் தன்மையும் எழுத்தாளன் பெற்றிருத்தல் வேண்டும். அவ்வாறன்றி 'யாம் இலக்கணம் பற்றியே நூல் யாப்போம்; பிறதுறை அறியோம்' என்று சொல்லிக்கொள்பவர்களை எவ்வாறு சிறந்த எழுத்தாளர்களென்று ஒப்புக்கொள்ளுதல் இயலும்?

இறுதியாக ஒன்று கூறுவாம். அஃதாவது எழுத்தாளன் தன் எழுத்தை, மக்கட்குழுவின் பல்வேறு பிரிவினர்க்கும் பயன்படும் வகையில் ஆளும் ஆற்றல் படைத்தவனாக இருத்தல் வேண்டும் என்பதாம். பள்ளிச் சிறுவர்கட்கும், கல்லூரி மாணவர்கட்கும், கற்பிக்கும் ஆசிரியர்கட்கும், அவர்களுக்கு வழிகாட்டும் ஆராய்ச்சியாளர்க்கும்–ஆக இவ்வெல்லாத் திறத்தார்க்குமேற்ற தனித்தனி நடையைக் கையாள எழுத்தாளன் கற்றிருத்தல் வேண்டும். இத்தகையவனே முழுமைபெற்ற எழுத்தாளன் ஆவன். எனவே, 'எளிய நடையில் எழுதுதல் எமக்கு இயலாததொன்று' என்று கூறும் புலவர்களும், 'இலக்கிய நடையா? யாருக்கு வேண்டும், அது?' என்று சொல்லும் குழந்தை எழுத்தாளர்களும் 'அரை குறை எழுத்தாளர்கள்' என்றே கூறத்தக்கவர் ஆவர்.

காலஞ்சென்ற தமிழ்ப்பேராசிரியர் திரு. கா. நமச்சிவாயர் அவர்களை இங்குக் குறிப்பிடுதல் பொருந்தும். கல்லூரி ஆசிரியராகப் பணியாற்றிய அவர், கல்விச்சாலையில் முதன் முறைபாக அடியெடுத்து வைக்கும் தொடக்கப்பள்ளி மாணவன் படிக்கத்தக்க பாடநூல்களையும் எழுதினர். முதலாம் வகுப்புப் பாடநூலில் அவர் எழுதியிருந்த "அ என்பவன் அத்திப்பழம் என்றான்–ஆ என்பவன் 'ஆகா' என்றான்" என்ற பாடலை இக்காலத்து முதியவர் பலர் இன்றும் நினைவில் வைத்துள்ளனர். அவரே 'தமிழ்க்கடல்' என்னும் தாளிகை வாயிலாகப் பல ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் வெளியிட்டார் என்பது தமிழுலகம் அறிந்ததொன்று.

எனவே, தன் உள்ளத்துத் தோன்றும் உயர்ந்த கருத்துகளை, பல்வேறு சாரார்க்கும் பயன்படும் பல துறைகளிலும், பலதிறப்பட்ட மொழிநடையில், குற்றமற்ற–தெளிவான சொற்களைப் பயன்படுத்தி, அழகுபெற எழுதுபவனே முழுமைபெற்ற, சிறந்த எழுத்தாளன் ஆவான் என்பது வெள்ளிடை மலையாம். 0

வடவேங்கடம்

க. ப. அறவாணன், மு க; கீ. க. தே.

பன்னிரு நாடுகளும் அவற்றின் இருப்பிடமும்:-

தொல்காப்பியர் குறிப்பிடும் 'செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலம்' என்பதற்குச் செந்தமிழ்நாடு அல்லாமல் அதனைச் சார்ந்த மற்றப் பன்னிரு நாடுகளை எடுத்துக் காட்டுவார் தெய்வச் சிலையார் என்னும் உரைகாரர் இக் குறிப்பை எடுத்துக்காட்டி இக் கருத்தையே சார்ந்துரைப்பர் சேனாவரையப் பதிப்பாசிரியர் அறிஞர் பாவாணர்[27]. அரசஞ் சண்முகனார 'செந்தமிழ் நிலமென்றது செந்தமிழ் இயற்கையும் திரிபுஞ் சேர்ந்த பன்னிரு நாடாகலானும் அவ்வுரை பொருந்தாது என்ப' என்று தெய்வச்சிலையார் உரையை மறுத்துரைப்பர். 'தென் பாண்டி குட்டம்...' முதலாய பன்னிரண்டு நாடுகள்தாம் செந்தமிழ் சேர்ந்த நிலங்கள் என்பது அரசஞ் சண்முகனார் கருத்து[28]. யாப்பருங்கல உரைகாரர், சங்கர நமச்சிவாயர், மயிலைநாதர், வி. கனகசபை, ந. சி. கந்தையா ஆகியோரது கருத்தும் இதுவே. தெய்வச் சிலையார் குறிப்பிடும் பன்னிரு நிலங்களில் 'கலிங்கமும்' ஒன்றாகக் குறிக்கப்படுகிறது. கலிங்கம் என்பது இன்றைய ஒரிசா (ORISSA) மாநிலமாகும். அம்மாநிலத்தில் பேசப்படும் ஒரிசாமொழி தமிழைச் சார்ந்ததோ, அல்லது திராவிட இனத்ததோ அன்று. ஆதலின் அதனைச் செந்தமிழ் சேர்ந்த நிலம் எனக் கொள்ளுதற்கில்லை[29]. இதுபோன்ற தடை இருப்பதால் தென்பாண்டி முதலான நாடுகளையே செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலமெனக் கொள்ளல் நேரிது.

இனி அப் பன்னிரு நாடுகள் அமைந்த இடம் பற்றிய விளக்கங்களை அறிதல் வேண்டற்பாலது. தமிழகத்தின் மேலைக் கடற்கரையோரத்தின் தெற்குத் தொடங்கி வடக்கு நோக்கி வேணாடு, குட்டநாடு, குடநாடு கற்கா நாடு, பூழிநாடு அமைந்துள்ளன. கீழைக்கடற்கரைப்பகுதியில் தெற்கிருந்து வடக்குநோக்கித் தென்பாண்டி நாடு, பாண்டி நாடு,

27. சேனாவரையம் கழக வெளியீடு. நூற்பா 400 அடிக்குறிப்பு
28 ந. சி. கந்தையா, தமிழகம், பக். 70.
29. இக்கருத்துக்கு மாறாக, ஒரிசாநாட்டுக் குன்றுகளில் இன்றும் பேசப்படும் கூ (KU) மொழி திராவிட மொழிதானே (Dr. Caldwell. P. 35 1956) என்று காட்டக்கூடும். இஃது ஆராயத்தக்கது.

பன்றிநாடு, புனல்நாடு, அருவாநாடு, அருவாநாட்டிற்கு மேற்கே மலாடு, சீதநாடு, வடக்கே அருவா வடதலைநாடு ஆகியன அமைந்துள்ளன. அருவா வடதலைநாடு உள்ளிட்ட வேங்கட நெடுவரை கிருட்டிணை ஆறுவரை பரவிக்கிடக்கிறது.

வேணாடு:- தற்போதுள்ள கோட்டாறு என்னும் பகுதியோடு கூடிய திருவாங்கூர்ப் பகுதியே வேணாடு எனத் திருவாங்கூர்ப் பழம் பொருளாராய்ச்சி வெளியீடு குறிக்கின்றது. குட்ட நாட்டிற்குத் தெற்கிலுள்ள நாடு இது. இப்பகுதியிலுள்ள தாழ்ந்த குன்றுகளும், பள்ளத்தாக்குகளும் வளமான மூங்கில் காடுகளால் மூடப்பெற்றுள்ளன. வேண் நாடு அதாவது மூங்கில் நாடு என்பது இதன் காரணப் பெயராகும்[30]. வேளிர் வாழ்ந்த நாடு, வேள் + நாடு = வேணாடு என்றாயிற்று எனக் கருதுவாரும் உண்டு[31]. பேரா. மு. இராகவையங்கார் வேணாடு என்பது கூர்ச்சரம் அல்லது மகாராட்டிரம் என்பர்[32].

குட்டநாடு:- கேரள மாநிலத்தைச் சேர்ந்த கோட்டயம், கொல்லம் என வழங்கும் நகரங்களை உள்ளிட்ட பகுதி குட்டநாடாம். இந்நாட்டின் மக்களும் அவர்கட்குத் தலைமைபூண்ட குடியினரும் குட்டுவர் என்ற பெயரால் அழைக்கப்பட்டனர். இந்நாட்டின் மன்னனை சேரன் 'குட்டுவன்' என்று குறிக்கப்பட்டான்.

கற்காநாடு:- தற்போதுள்ள கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சார்ந்து மேற்குத் தொடர்ச்சி மலையின் கிழக்குப் புறத்தில் உள்ள கற்குன்றுகள் நிறைந்த பகுதியே கற்கா நாடாகும்.

குடநாடு:- குட என்றால் மேற்கு என்று பொருள்; தமிழகத்தின் மேற்குப் பகுதியில் உள்ள நாடு. எருமைநாடு தற்கால மைசூர்மாநிலம் என்பது முன்னே குறிக்கப்பட்டது. குடநாட்டின், ஒருபகுதி தென் பகுதி இன்றைய கேரளத்தையும், வடபகுதி மைசூரையும் குறிக்கும்.

---

30. 1800 ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகம். பக். 29.

31. பர். மொ. அ. துரை அரங்கசாமி, சங்ககாலச் சிறப்புப் பெயர்கள். பக். 333.

32. வேளிர் வரலாறு. பக். 17. சங்ககாலச் சிறப்புப் பெயர்கள் மேற்கோள். பக். 333.

பூழிநாடு:- பூழி அல்லது 'மணற் பாலைப் பரப்பு' தற்கால அகலப்புழை ஆற்றின் கரையிலிருந்து பொன்னனி ஆற்றின் கடல் முகம் வரை பரவி இருந்ததாதல் வேண்டும். இப் பூழிநாடு நன்னனுடைய நாடாகப் பேசப்பட்டுள்ளது. பூழிநாட்டு மக்கள் கிழக்குப் பக்கமாய்ச் சென்று பாண்டிய நாட்டில் குடியேறி வாழத் தொடங்கிய பின்னர்தான் பாண்டிய மன்னன் பூழியர்கோன் எனப்பட்டான்[33].

தென்பாண்டி நாடு:- குமரிமுனையை ஒட்டிய நாஞ்சில் நாடே இப்பகுதியாகும்.

பாண்டி நாடு:- தமிழ்நாட்டை 13 பிரிவாகப் பிரித்து அவற்றுள் ஒன்று பாண்டிநாடு எனக் கொள்கிறார் அறிஞர். வி. கனகசபை[34]. இப்பாண்டி நாட்டை நடுவாகக் கொண்டே ஏனைய நாடுகள் பெயரிடப் பட்டுள்ளன. பாண்டி நாட்டுக்கு மேற்கே உள்ளதுதான் குடநாடு என்பதும், அதற்கு நேர் தெற்கே உள்ளதுதான் தென்பாண்டி நாடு என்பதும் கவனித்திற்குரியன. அக்காலத்துத் தமிழ் நிலைபெற்ற இடம் பாண்டிய நாடு என்பதாலும், தொல்காப்பியம் பாண்டியன் அவையில் அரங்கேற்றப்பட்டதாலும், இன்ன பிற சிறப்பானும் பாண்டிநாட்டை மையமாகக் கொண்டனர் போலும்.

பன்றிநாடு:- பாண்டி நாட்டுக்கு வடக்கே வேட்டுவர் நாடு அல்லது வேடர்நாடு இருந்தது. பன்றிகள் நிறைந்த நாடு எனுங் கருத்தில் இவ்வாறு அழைக்கப்பட்டது[35]. பழனி மலையைச் சுற்றி இருந்த பகுதியே பன்றிநாடு எனப் பெயர் பெற்றதென்று தமிழ்ப் பேரகரமுதலி காட்டுகிறது.

புனல்நாடு:- நீர்நிறைந்த, வளம்மிகுந்த நாடு என்பது புனல் நாடு என்பதன் பொருளாகும். இது சோழ நாட்டைக் குறித்ததாதல் வேண்டும். சேனாவரையர் பொங்கர் (சோலை) நாடு எனக் குறிப்பிட்டதும் இந் நாட்டையே யாதல் வேண்டும்.

அருவாநாடு:- புனல் நாட்டுக்கு வடக்கிலுள்ளது. இந்நாடு கொள்ளிடத்திற்கு வடக்கே உள்ள தென்னார்க்காடு மாவட்டத்தின் பெரும் பகுதி அருவா நாடு எனக் கருதப்படுகிறது.

33. வேளிர்வரலாறு. பக். 334.
34. 1800 ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகம். பக். 23.
35. மேற்படி. பக். 46.

அருவா வடதலை நாடு:- இது தற்போதுள்ள செங்கற்பட்டுமாவட்டமே எனத் தமிழ்ப் பேரகரமுதலி கூறுகிறது[36]. அருவா வடதலை நாடு உள்ளிட்ட தொண்டைநாட்டின் எல்லை, ஆந்திராவில் ஓடும் வடபெண்ணையாறுவரை என்ற செய்தி முன்னரே விளக்கப்பட்டது.

சீதநாடு:- தற்காலத்துக் கோயம்புத்தூர் நீலமலை மாவட்டப் பகுதிகளைக்கொண்ட நாடு சீத நாடாம்.

மலாடு:- மலைநாடு என்பதன் மரூஉவே மலாடு என்பதாம். தற்காலத்துத் திருக்கோயிலூரும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளுமே மலாடு ஆகும். அதனை ஆண்ட மலையமான் நாடே, மலாடு என்று திரிந்தது என்பாரும் உளர்.

அருவா, அருவாவடதலை நாடுகளுக்கு அப்பால் அயிரை ஆற்றின் வடகரைப் பகுதியும் உள்ளிட்டு, கிருட்டிணை ஆறு வரைக்கும் பரந்துள்ள வெப்பம் நிறைந்த மண்டலமே வேங்கடமாகும். இவ் வேங்கடமே தொல்காப்பியப் பாயிரத்தில் வடவேங்கடம் எனச் சுட்டப்பட்டதாதல் வேண்டும். இக் காலத்து இவ்வெல்லைக்குள், தெலுங்கு, கன்னட, துளு மொழிகள் பேசப்பட்டாலும், தொல்காப்பியர் காலத்தில் செந்தமிழின் கிளைமொழிகள் (Dialects) பேசப்பட்ட பகுதியாகவே இருந்திருத்தல் வேண்டும்.

மொழிவழிச் சான்றுகள்:- தொல்காப்பிய விதிகளுள் கழகக் காலத் தமிழுக்கும், அதன் பின்னே வந்த தமிழுக்கும், தற்காலத் தமிழுக்கும் பொருந்தாத சில உள்ளன. இத்தகு விதிகள் எல்லாம் வழக்கொழிந்தன என்று தள்ளப்பட்டு வந்தன. ஆனால், அறிஞர் கால்டுவெல்லுக்குப் பிறகு திராவிட மொழிகளின் ஒப்பீட்டாராய்ச்சி வளரத் தொடங்கியது. இவ்வாராய்ச்சியால், சில தொல்காப்பிய விதிகள் புது விளக்கம் பெற்றன. தமிழுக்குப் பொருந்ாதன என விலக்கப்பட்ட தொல்காப்பிய விதிகள். தற்காலத் தெலுங்கு, கன்னட, துளு, மலையாள மொழிகளில் அமைந்து போற்றப்படுவதை அறிஞர்கள் கண்டார்கள். இந்த ஆய்வால் இன்னொரு செய்தியும் உறுதியாயிற்று. தொல்காப்பியர் தம் இலக்கணத்திற்கு எடுத்துக்கொண்ட மொழி எல்லை, தற்காலத் தமிழ்நாட்டெல்லை மட்டிலும் கொண்டதன்று; அதனினும் பரந்த தெலுங்கு, கன்னட, மலையாள, துளு மொழிகளும் உள்

36. Tamil Lexicon. P. 135.

ளிட்ட பழந்தமிழகமே அவருக்குத் 'தமிழ்கூறு நல்லுலக' மாக இலங்கியிருத்தல் வேண்டும் என்பதுறுதியாயிற்று. சான்றிற்குச் சில எடுத்துக்காட்டுகளைப் பார்ப்போம்.

I (அ) தா, வா என்னும் வினை அடிகள் முற்றிலும், எச்சத்திலும், தன்மை, முன்னிலை இடங்களில் மட்டுமேவரும் (தொல். சொல். 29)

எ-டு: எனக்குத் தந்தான்
என்னிடம் வந்தான்
உனக்குத் தந்தான்
உன்னிடம் வந்தான்.

(ஆ) செல், கொடு என்னும் வினையடிகள், முற்றிலும், எச்சத்திலும், படர்க்கை இடத்தில் மட்டிலுமே வரும், (தொல். சொல். 30)

அவனிடம் சென்றான்
அவனிடம் கொடுத்தான்.

இவ்வரையறைகள் இன்றைய தமிழில் போற்றப்படுவதில்லை. இலக்கியத் தமிழிலும் வழக்கு மாறிய இடங்கள் உள்ளன.

எனக்குத் தந்தான் (தொல்காப்பியம்)
எனக்குக் கொடுத்தான் (தற்காலம்)
உனக்குத் தந்தான் (தொல்காப்பியம்)
உனக்குக் கொடுத்தான் (தற்காலம்)

என்று தற்காலத் தமிழில் முரணி வழங்கக் காண்கிறோம். ஆனால் (தொல்காப்பியம் கூறும்) இந்த அமைப்பு இன்னும் சிதையாமல், இன்றும் குலையாமல் தோடர் மொழியில் போற்றப்படுகின்றது. இதனை அறிஞர் எம். பி. எமனோ (Emeneau) எடுத்துக் காட்டியுள்ளார்[37].

II முன்னிலை தன்மை ஆயீ ரிடத்தொடு
மன்னா தாகும் வியங்கோள் கிளவி
(தொல். சொல். 226)

37. A History of Tamil Language. Prof. T. P. M-P. 51.

என்ற தொல்காப்பிய நூற்பாப்படி, வியங்கோள் வினை படர்க்கையில் மட்டுந்தான் வரவேண்டும். ஆனால் இந்த நடைமுறை கழகக் காலத்திலேயே வழக்கிறந்து விட்டது. பிற்காலத் தற்காலத் தமிழிலும் போற்றப்படுவதில்லை. அங்ஙனமாயின் தொல்காப்பியர் விதி செய்தது எம்மொழியைப் பார்த்து என்பது ஆய்வுக்குரியது, இன்றும் கன்னட மொழியில் கெ (Ke), கெ (ghe) என்னும் வியங்கோள் இறுதிநிலைகள் முன்னிலையிலும் தன்மையிலும் வரப்பெறுவதில்லை; படர்க்கையில் மட்டுமே வருகின்றன. தெலுங்கில் எடுன், ன என்ற வியங்கோள் இறுதி நிலைகளும் இவ்விதிக்கு இலக்கியமாய்த் திகழுகின்றன[38].

III தொல்காப்பியர் காலத்துத் தமிழ் மலையாளத்தையும் உள்ளடக்கியது என்பதற்குப் பிறிதொரு சான்று. தொல்காப்பிய எழுத்ததிகார நூற்பாக்கள் 241, 242, 287, 378, 402. ஆகியன பனி, வளி, மழை, வெயில், இருள் என்னுஞ் சொற்கள் அத்துச் சாரியை பெற்றே வழங்குவன என்று வலியுறுத்துகின்றன. இயற்கைத் தொடர்பான இச்சொற்கள் அத்துப்பெற்று வரவேண்டும் என்பதைப்பிற்கால இலக்கண நூற்களான நேமிநாதம், வீரசோழியம், நன்னூல், இலக்கண விளக்கம் ஆகியன குறிக்கவே இல்லை. அத்துச்சாரியை பெற்றுவரும் மேற்கண்ட சொல்வழக்கு, கழக இயக்கத்திலும் காணப்படவில்லை. ஏனைய பதினெண் கீழ்க்கணக்கு நூறகளிலோ, ஐம்பெரும் பாவியங்களிலோ இவ்வழக்கு வழங்கவுமில்லை. பத்தி இலக்கியங்களான தேவார, நாலாயிரத் திவ்வியப்பிரபந்தத்திலும காணப்படுமாறில்லை. தற்காலத் தமிழிலும் இல்லை. இங்ஙனம், இலக்கணத்திலும், இலக்கியத்திலும் இல்லாத மொழி வழக்கைத் தொல்காப்பியர் ஏன் வகுத்தார்? இந்த ஆராய்ச்சி மனத்தோடு திராவிட மொழிகளை ஆராயின் உண்மை துலங்கும். மலையாள மொழியில் (பனி, வளி, மழை, வெயில், இருள் எனுஞ் சொற்கட்கு) அத்துச் சேர்த்துச் சொல்லும் வழக்கம் இன்றும் காணப்படுகிறது.

பனியத்துப் போகருதே
மழையத்துப் போகருதே
வெயிலத்துப் போகருதே

என்ற வழக்கு மொழிகளைக் கேரள நாட்டில் இன்றுங் கேட்கலாம்[39].

38. வே. வேங்கடராசலு, நுண்பொருள் விளக்கம். பக். 51.
39. பேரா. சு. வையாபுரி. தமிழ்ச்சுடர்மணிகள். பக். 20.

என்றும் மாறாத இளமை

அ. பொன்னம்பலம்.

ஆடவராக இருந்தாலும் சரி அல்லது மகளிராக இருந்தாலும் சரி, தங்கள் உடலை என்றும் இளமையாக வைத்துக்கொள்ள வேண்டும் என்ற வேட்கை அற்றவர்களை இவ்வுலகில் காண்பது மிகமிக அரிய செயலாகும். அன்றைய மாந்தன் முதல் இன்றையமாந்தன் வரை அனைவரும் மூப்பை வென்று தங்கள் உடலை என்றும் இளமைப்பொலிவுடன் வைத்துக்கொள்ள வேண்டுமென்ற பேராவலுக்கு அடிமையானவர்களே. மூப்பும் இறப்பும், சிக்கலான உடலமைப்பை நாம் பெற்றதற்காக இயற்கை அளித்த பரிசுகளாகும். நேற்றைய மாந்தனைவிட இன்றைய மாந்தன் மூப்பை வெல்வதில் ஓரளவு முன்னேற்றம் கண்டுள்ளான்; ஏனென்றால் நேற்றைய மாந்தன் தன்னுடைய மூப்பை வெல்ல அறிவுக்குப் பொருந்தா முறைகளை நாடினன். ஆனால் இன்றைய மாந்தன் பல்வகையான நுண்ணிய ஆய்வு முறைகளின மூலமாக, மூப்பு ஏன் ஏற்படுகிறது, மூப்பின்பொழுது உடல் அடையும் மாற்றங்கள் யாவை, இந்த மாற்றங்களைத் தடுக்க வழிமுறைகள் யாவை, என்பன போன்ற சிக்கலான வினாக்களுக்கு அண்மைக் காலத்தில் விடை காணத் தொடங்கியுள்ளான்.

முதுமையில் உடல் அடையும் மாற்றங்கள் யாவை?

உயிரினங்களின் வாழ்க்கையில் அகற்ற இயலா இரு நிகழ்ச்சிகள் முதுமையும் இறப்புமாகும், ஆனால் ஓரறை உயிரினங்கள்

(38ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதனானும் தொல்காப்பியர் காலத் தமிழும் தமிழகமும் திருப்பதி தொடங்கி குமரி உள்ளிட்ட மொழியுலகம் மட்டுமன்று என்பது வலியுறும். அது கேரள மாநிலத்தையும், கன்னட மாநிலத்தையும், ஆந்திர மாநிலத்தில் ஒரு பகுதியையும் உள்ளிட்ட ஏறக்குறைய 192283 சதுரக்கற்கள் (Square miles) பரப்புடைய பெரும்பகுதியாகும். இன்றோ அவ்வெல்லை 50132 சதுரக் கற்களாகச் சுருங்கிவிட்டது[40].

(முற்றும்)

---

40. இக்கணக்கீடு 1960-ஆம் ஆண்டு இந்திய அறிக்கைப் (1960. India) படி செய்யப்பட்டது. தென்குமரி, தற்காலக் குமரி எனக் கொள்ளப்பட்டு இப்பரப்பளவு எடுக்கப்பட்டுள்ளது. அது குமரிக் கண்டத்தைக் குறிக்கிறது என்பது நிறுவப்பெறின், தொல்காப்பியர் காலத் தமிழ் எல்லை மேலும் விரியும்.

மட்டும் (Unicellular Organisms) வாழ்க்கைப் போராட்டத்தில் மடியாது உயிர்வாழ்கின்றன. இவைகூடத் தங்கள் இனத்தை அழியாது காப்பதில்தான் வெற்றிஅடைகின்றனவேதவிர, தங்களுடையஉடலைக் காப்பதில் அல்ல. ஒரு நுண்ணறையை உடைய உயிரினங்கள் தங்கள் உடலை இரண்டாகப் பிளந்து அடுத்த இரண்டு உயிரினங்களைத் தோற்றுவிப்பதன் மூலமாக மூப்பையும், இறப்பையும் வெல்லுகின்றன. இவை தவிர, மற்ற சிக்கலான உடலமைப்பைக் கொண்ட உயிரினங்கள் யாவும், மூப்பிற்கும் இறப்பிற்கும் அடிமையாகின்றன; ஆனால் இந்த உயிரினங்கள் பெற்றிருக்கும் ''முளையிடும் நுண்ணறைகள்" (Germinal cells) மட்டும் மேற்கூறிய மாற்றங்களுக்கு விதிவிலக்காகும்.

முதுமையில் உடல் அடையும் மாற்றங்களைப்பற்றி அண்மையில் ஆய்வுக்கூடங்களில் நிகழ்த்திய ஆய்வுகளின் மூலமாகப் பல அரிய உண்மைகளைக் கண்டுபிடித்துள்ளனர். முதுமைக் காலத்தில் உடலிலுள்ள நுண்ணறைகளில் இரண்டுவகையான மாற்றங்கள் நிகழ்வதைக் கண்டுபிடித்துள்ளனர். முதலாவதாக, முதுமைப் பருவத்தின் பொழுது நுண்ணறைகள் இரண்டு இரண்டாகப் பிரிந்து தங்கள் எண்ணிக்கையைப் பெருக்க இயலாத நிலையை அடைகின்றன. இரண்டாவதாக, நுண்ணறைகளில் பொதிந்திருக்கும் நீரின் அளவானது முதுமைப் பருவத்தின் பொழுது கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து கொண்டே வருகின்றது. இத்தகைய இரண்டு மாற்றங்களும் மிகவும் நெருங்கிய தொடர்புடைய மாற்றங்களாகும். நுண்ணறைகளானவை விரைவாகத்தங்களுடைய எண்ணிக்கையைப்பெருக்கவேண்டுமென்றால் நுண்ணறைகளில் பொதிந்திருக்கும் நீரின் அளவானது மிகுதியாக இருக்கவேண்டும். சான்றாக, அன்னையின் கருப்பையில் வளரும் கருவின் நுண்ணறைகளில் பொதிந்திருக்கும் நீரின் அளவானது 95 விழுக்காடாகும்; புதிதாகப்பிறந்த குழவியின் உடலிலுள்ள நுண்ணறைகளின் நீரின் அளவானது 80 விழுக்காடாகும்; இதுபோலவே ஆடவனின் உடலிலுள்ள நீரின் விழுக்காட்டு அளவானது 70 ஆகும். முதுமைப் பருவத்தின் பொழுது நுண்ணறைகளில் பொதிந்திருக்கும் நீரின் அளவானது குறைவதால் உடலின் நிறைபானது குறைவதோடு அல்லாமல் நுண்ணறைகள் விரிந்து சுருங்கும் ஒப்பற்ற தன்மையையும் இழக்கின்றன. மேலும் நுண்ணறைகள் தரும் ஆற்றலின் திறன்

குறைவதால், உடலின் இயக்கங்களில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்துகின்றன.

முதுமை அடைந்த நுண்ணறைகள், நீரைத்தங்களுடைய மெல்லிய கண்ணறைகளின் வழியாக உறிஞ்ச இயலா நிலையை எய்துவது நுண்ணறைகளின் வேதியல் அமைப்பில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்துகின்றன. எனவே ஒரு மனிதன் இழந்த இளமையை மீண்டும் பெற வேண்டுமெனில் அறைகளிலுள்ள நீரின் அளவை மிகுதிப்படுத்த வேண்டும்.

முதுமையின் காரணமென்ன?

முதுமை ஏன் ஏற்படுகிறது என்ற வினாவிற்கு விடையாக இரண்டு வகையான கருத்துகள் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. முதல் கருத்தானது, உடல் முதுமை அடைவதற்குக் காரணம் உடலில் தேங்கும் பல்வகையான கழிவுப் பொருட்கள் உடலை நஞ்சாக்கி விடுவதே எனக் கூறுகின்றது. இரண்டாவது காரணமானது, இளமைப் பருவத்தின்பொழுது உடல் பெற்றிருந்த முதன்மையான மூலப்பொருட்களை முதுமையின் பொழுது இழப்பதே எனக் கூறுகின்றது. இரண்டு வகையான காரணங்களையும் சற்று விளக்கமாகக் காணுவோம்.

(அ) நச்சுக்கொள்கை:-

இத்தகைய கருத்தை முதன்முதலாக நிலைநாட்டியவர் மெட்னிகாப் என்ற மருத்துவர்தான். இவருடைய கருத்தின்படி உயினரிங்களின் குடல் நீளம் மிகுதியாக மிகுதியாக, உயிரினங்களின் வாழ்நாள் மிகவும் குறைகிறதென்கின்றார். இக் கொள்கைக்குச் சான்றாக, முயலின் வாழ் நாளை விடப் பறவை இனங்களின் வாழ்நாள் மிகுதியாக இருப்பதற்குக் காரணம், பறவை இனங்கள் குறுகிய குடலைப் பெற்றிருப்பதுதான் எனக் காட்டுகின்றார். நீண்ட குடலை மாந்தன் பெற்றிருப்பதால், குடலில் எளிதாகச்சிதைவு மாற்றங்கள் ஏற்படுகின்றனவென்றும், இதனால் மாந்தனின் உடலில் நஞ்சுதேங்குகிறதென்றும் கூறுகின்றார்; எனவே இதற்கு மாற்றாகப் பல்கேரியா நாட்டில் விளையும் "யேகார்ட்" என்ற பொருளை மாந்தன் உண்டால் சிதைவு மாற்றங்களைத் தடுத்து விடலாமென இவர் கூறுகின்றார். இவருடைய கருத்தானது இன்றும் ஆய்வுக்குரிய கருவாகவே இருந்து வருகின்றது.

(ஆ) இழப்புக் கொள்கை:-

முதுமைப் பருவத்தின்பொழுது, நாளமற்ற சுரப்பிகள் சுரக்கும் வேதிநீரின் (Hormone) அளவானது குறைவதால், வேதிநீருக்கும், முதுமைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டெனக் கூறுகின்றனர். இக் கருத்தை நிலைநாட்ட இவர்கள், வேதிநீர் குறைபாடுகளுக்கு ஆளாகும் அலிகளும், முதியவர்களும், சிலவகைப் பொதுவான உடலியல் மாற்றங்களைப் பெற்றுள்ளனர் எனச் சான்றுகளைக் காட்டுகின்றனர். இத்தகைய கருத்தை முதன் முறையாக நிலைநாட்டியவர் பிரவுன்-சிகேடு என்ற மருத்துவர்தான். இவரே தமக்கு ஏற்பட்ட முதுமை மாற்றங்களை நாயின் விதைப்பையினின்று இறக்கப்பெற்ற சாற்றை உட்கொண்டு, இளமை உணர்வைப் பெற்றதாக விளம்புகின்றார்.

மருத்துவ முறைகள்;-

(ஆ) வேதிநீர் மருத்துவம்:-

முதுமைப் பருவத்தின்பொழுது உடலிலுள்ள பல்வகையான நாளமிலாச் சுரப்பிகள் சுரக்கும் வேதிநீரின் அளவானது குறைகிறது. சிறப்பாக விதைப்பை (Testis) சுரக்கும் வேதிநீரின் (Hormone) அளவானது மிகவும் குறைகிறது. இதை ஈடுசெய்வதற்காக, செயற்கை முறையின் மூலமாக இறக்கப்பட்ட விதைச் சாற்றினை முதியவர்களின் உடலில் செலுத்தினால் முதுமைப் பருவத்தில் ஏற்படும் சிலவகையான நிகழ்ச்சிகளை எளிதில் தடுக்க முடியுமென மருத்துவர்கள் கூறுகின்றனர். இதுபோலவே, கேடயச் சுரப்பியினின்று (Thyroidgland) எடுக்கப்பட்ட வேதிநீரையும், சிறுநீரக மேல்சுரப்பியினின்று வடிக்கப்பட்ட வேதிநீரையும், பயன்படுத்தலாமெனக் கண்டுள்ளனர். இத்தகைய அடிச்சுவட்டில், இன்னும் விரிவான ஆய்வு நிகழ்ந்து கொண்டிருக்கிறது. எனவே இத்தகைய முறை வெற்றிபெற இன்னும் சில ஆண்டுகள் ஆகும்.

(ஆ) மற்ற முறைகள்:-

உருசிய மருத்துவர்கள், முதுமைப் பருவத்தில் நிகழும் உடலியல் மாற்றங்களைத் தடுக்க அண்மையில் இரு புதிய முறைகளைக் கண்டுபிடித்துள்ளனர். இத்தகைய மருத்துவ முறைகளுக்கு "உயிர்-வேதியியல் மருத்துவமுறை (Proto Pharmo Therapy); நுண்ணறைச் சிதைவு மருத்துவ முறை" (Cytolysin Therapy) எனப் பெயரிட்டுள்ளனர். இசுலான்சுகை என்னும் உருசிய மருத்துவர் ஆவின் கருவி

லுள்ள கண்ணறைகளின் சாற்றைப் பிழிந்தெடுத்து முதியவர்களுக்குச் செலுத்தினல் முதுமையை ஓரளவு வெல்லலாம் என்கின்றனர்.

முதுமையை எவ்வாறு தடுப்பது:-

முதுமைப் பருவத்தின்பொழுது பல்வகைச் சிக்கலான நோய்களில் ஒன்று குருதிக் குழாய்கள் தடித்தலாகும். எனவே முதியவர்கள் இத்தகைய சிக்கலான நோய் ஏற்படாதவாறு வழி காண வேண்டும். முதுமைப் பருவத்தின்பொழுது, ஒவ்வோர் ஆண்டும், உடல் ஆய்வு செய்து கொள்வது சாலச் சிறந்த முறையாகும். முதுமைப் பருவத்தின் பொழுது நிகழும் உடலியல் மாற்றங்களைப்பற்றித் தெளிவான அறிவைப் பெற்றபின்னர்தான் முதுமையைத் தடுக்க முடியும். ஆனல் முதுமையைப் பற்றிய அறிவோ இன்னும் ஆய்வுக்குரிய பொருளாகவே இருக்கின்றது. முதுமைப் பருவம் என்பது வாழ்க்கையின் மாலைக்காலம் போன்றது; முதுமை ஏற்படும் காலத்தை ஓரளவு தள்ளித்தான் வைக்க முடியுமே ஒழிய, முதுமையை ஒழிக்க முடியுமென்பது வெறும் பகற்கனவேயாகும். O

பிழை திருத்தம்.

சுவடி 6. ஓலை 2. அட்டைப்படப் பாட்டின் இரண்டாம் அடியை

"அற்றைத் தமிழ்த்தாயிங் காட்சி புரி யும்வரை"

என்றும்,

சுவடி 6. ஓலை. 4. அட்டைப் பாட்டின் இரண்டாம் அடியை,

"குற்றுமி மேன்மேலும் குத்திச் சலிப்பதுபோல்;;

என்றும் திருத்திப் படித்துக்கொள்ள வேண்டுகின்றோம். இத் திருத்தங்கள் தொடக்கத்தில் அச்சிடப்பெற்ற சில அட்டைப்படப் படிகளில் திருத்தப் பெறுமலேயே விடுபட்டன திருத்தமுருப் படிகளைப் பெற்றவர்கள் அருள்கனிந்து அவற்றை முறையே திருத்திக் கொள்ளவும். விரைவு காரணமாக நேர்ந்த இப் பிழைகளுக்கு வருந்துகின்றோம்.

—ஆசிரியர்.

தலையாட்டும் ஓந்தி போல்வீர்!

-மணிவேலன்-

1. வீதியிலே நடந்திட்டேன்; என்காதில் ஒருபாடல்
வீழக் கேட்டேன்!
காதுக்குள் இன்பத்தைப் பாய்ச்சுமென எண்ணியதால்
காதைச் சாய்த்தேன்!
காதுக்குக் கம்மலினை மாட்டென்று காட்டுகையில்
கருந்தேள் கொட்ட
நோதலுற்றுத் துடிக்கின்ற பெண்ணைப்போல் துடித்திட்டேன்!
நுவலக் கேட்பீர்:

2. திரையிட்ட பெண்ணழகைத் திரைநீக்கிக் காட்டுகின்ற
திரைப்படத்தின்
'உரைப்பாடல்' ஒலிபெருக்கி யெனுங்கழுதை வாயாலே
ஓங்கிக் கத்தி
இரைச்சலினைச் செய்ததனுல் என்காது பெற்றதுன்பம்
என்ன சொல்வேன்!
அரைக்கிழவி ஒப்பனையால் இளங்குமரி யாகிவிட்ட
அழகைப்(!)போல

3. உரைநடையும் இசையென்னும் ஒப்பனையால் பாடலென
உருவெ டுக்கும்!
வரையற்ற கொச்சைச்சொல்; பிறமொழிச்சொல்; பாலுணர்
வளர்க்கும் சொற்கள்; [வை
திரைநீக்கும் பச்சைச்சொல்; தேவடியாள் காசுக்குத்
திண்டில் சாய்ந்தே
உரைக்கின்ற காமச்சொல்...அவ்வளவும் கோவையிட்ட
உளறல்...பாடல்!

4. இருகையால் காதிரண்டை அடைத்தபடி நடந்திட்டேன்;
எதிரே நின்ற
பெருஞ்சுவரை நோக்கினேன்; திரைப்படத்துச் சுவரொட்டி...!
பெண்ணொ ருத்தி
குருத்திட்ட வாழையென உடலழகைக் காட்டுவதைக்
குறியாய்க் கொண்டே
அரையாடை யணிந்திருந்தாள்! அதுவுந்தான் பன்னுடை!
அவளா பெண்ணுள்?

5. ‘சீ’யென்று திரும்பினேன்; விடுவிடென நடந்திட்டேன்;
தெருவில்... ஆங்கே...
‘நீயென்ன ஆண்மகனு? துணிவிருந்தால் எனைக்கொஞ்சம்
நிமிர்ந்து பார்த்தும்
‘ஏ’யென்று தலைகவிழ்ந்து செல்லாமல் இருபார்ப்போம்!’
என்பதைப்போல்
‘காவலிலா பணக்குவியல்’ நினைவூட்டும் தோற்றத்தில்
கன்னி வந்தாள்!

6. ‘விடைக்கின்ற ஆண்மகனைக் கண்டக்கால் பெண்மட்டும்
வெட்கங் கொண்டு
சடக்கென்று நாணுற்றுத் தலைகவிழ்ந்து போவதுவாம்...!
தடித்த ஆண்கள்
கடைக்கண்ணை வீசுவதாம்...! அவரையெலாம் பழிவாங்கக்
கருதி விட்டோம்...
உடைக் குறைப்புச் செய்துவிட்டோம்! ஆண்களெலாம்
ஓட வேண்டும்!’ [நாணுற்றே

7. என்பதுபோல் அவள் வந்தாள்! கண்ணிரண்டை என்கையால்
இறுகப் பொத்தி
முன்நடந்தேன்; பாறையொன்று மோதிவிட்டுப்போனதுபோல்
உணர்ந்தேன்; ஆனல்
என்னவிது? பெண்ணன்றோ செல்கின்றுள்? மென்மையெலாம்
இவளுக் கெங்கே?
மென்பஞ்சும் இவளடிக்கே உறுத்துமென்ற நிலைமாறி
‘மெல்’லடிக்கு (!)

8. நெருஞ்சியும் வெருண்டோடும் என்கின்ற நிலையன்றோ
வந்த திந்நாள்?
பெருஞ்சுமையாய் மனம்கனக்கப் பேரிடியால் தலைசுற்றப்
பெரிதும் நொந்தேன்!
இருந்தென்ன...போயென்ன.... இப்பெரிய தமிழ்நாடு?
இருக்கும் பண்பைப்
பொருந்தாத புதுமையெனும் புதைகுழியில் புதைப்பீரோ
புழுத்த நெஞ்சீர்?

9. எட்டிநிற்கும் ஆள்கண்டால், பெருமிதமாய்த் தலையாட்டி
இன்னும் சற்றுக்
கிட்டவந்தால் தலைதாழ்த்தி யோடுகின்ற ஓந்தியைப்போல்...
கீழும் மேலும்
நெட்டைமரம் ஆடியிலே அசைவதுபோல் மேடையிலே
நீவி ரெல்லாம்
வெட்டிக்குத் தலையாட்டிப் பேசிவிட்டுக் கோட்டைவிடும்
வீணர் அன்றோ?

10. மேடைக்கு மேடையெங்கும் வாய்மழையைப் பொழிகின்றீர்!
மீசை மட்டும்
தாடையின்மேல் தேள்கொடுக்குப் போல்முறுக்கி விட்டபடித்
தருக்கு கின்றீர்!
பாடையிலே போகின்ற பிணம்போல, செயலென்றால்
படுத்துக் கொள்வீர்!
மூடிடுவீர் உம்வாயை! செயலினிலே இன்றைக்கே
முனைந்து நிற்பீர்!

11. மொழிகாக்கப் போராட்டம் நடத்திவிட்டீர்! உம்பெருமை
முழங்கக் கேட்டோம்!
பழிவந்து சேர்வதுவோ? பண்பாடு மாய்வதுவோ?
பார்த்துக் கொண்டு
விழியிருந்தும் குருடர்போல் கிடப்பதுவோ? நீர்மட்டும்
வெகுண் டெழுந்தால்
அழுதுகொண் டோடாதோ உடல்காட்டும் நாகரிகம்?
அணி வகுப்பீர்!

12. பெண்மைக்குப் பேரிழிவைச் சேர்க்கின்ற ஆடையணி
போட்டி ருந்தால்
விண்முட்டும் குரலாலே கண்டிப்பீர்! அத்தகைய
'விலங்குப் பெண்டிர்'
மண்ணென்றே ஒதுக்கிடுவீர்! மணப்பதற்கு நினையாதீர்!
மாண்பு கொண்ட
பெண்மைக்கு மதிப்பளித்தால் பேயாட்டம் போடுகின்ற
பீழை யோடும்!

திருகிறக்கை' (HELICOPTER) ஊர்தி

-அ. தெ. தமிழநம்பி-

[பெயர் விளக்கம்: HELICOPTER என்ற ஆங்கிலச்சொல் HELIX, PTREON என்ற இரண்டு கிரேக்கச் சொற்களினின் றும் பிறந்ததாகும். HELIX என்ற சொல்லிற்கு திருகு (Screw) என்றும் PTREON என்ற சொல்லிற்கு இறக்கை (Wing) என் றும் பொருளாகும். எனவே HELICOPTER என்ற ஆங்கிலச் சொல் "திருகு இறக்கை" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது]

முன்னுரை: வானூர்திகள் (Aircrafts) அடிப்படையில் நிலை யிறக்கை (Fixed Wing) வகை, சுழலிறக்கை (Rotary Wing) வகை என இருவகைப்படும். இவற்றுள் சுழலிறக்கை வகையைச் சார்ந்தவை திருசிறக்கை (Helicopter) ஊர்தி என்றும், முகப் பில் செலுத்தியும் (Propeller) நிலையிறக்கைக்கு மாறாக உயரே ஒருசுழலியும் (Rotor) கொண்ட ஊர்தி என்றும் இரண்டு வகைப் படுகின்றன.

இவற்றுள் முதலாவதான திருகிறக்கை ஊர்தியில் செலுத்தி யாகவும் இறக்கையாகவும் ஒரே சுழலியே பயன்படுத்தப்படுகி றது. இரண்டாம் வகை ஊர்தியின் முகப்பில் உள்ள செலுத்தி (Propeller) ஊர்தியை நேரே செலுத்த, மேலே உள்ள சுழலி (Rotor) சுழல்கின்றது. இறக்கையாகப் பயன்படும் அச்சுழலி எவ்வகைப் பொறியாலும் இயக்கப்பெறுது காற்றலைகளாலேயே சுழல்கின்றது. திருகிறக்கை ஊர்தியில் சுழலி பொறி (Engine) யினுல் இயக்கப்படுகின்றது.

தரையிலிருந்து நேராக மேலே செல்லவும், மேலிருந்து நேராகக்கீழிறங்கவும், நேராக முன் நோக்கியும், பின்நோக்கியும், பக்கவாட்டிலும் பறக்கவும், வானில் ஒரே இடத்தில் நிலையாக நிற்கவும் வல்லதான வானூர்தியே திருகிறக்கை (Helicopter) ஊர்தியாகும்.

இயங்கும் முறை: திருகிறக்கை ஊர்தியிலுள்ள ஒரு பொறி சுழலியை சுழலச் செய்கிறது. சுழலியிலுள்ள அலகுகள் (Blades) வெளிப்பக்கமாக வளைந்திருக்கும். அதனுல் காற்று உச்சிமீது விரைவாக வீசும். இதனுல் ஏற்படும் தூக்கு ஆற்றல்

(Lifting Power) ஊர்தியின் எடையைவிட மிகுதியாகும்போது ஊர்தி மேலே எழுகிறது. ஊர்தியின் எடைக்குச் சமமாக இருக்கும்போது காற்றில் நிலையாக நிற்கிறது. ஊர்தியின் எடையை விடக் குறையும் பொழுது கீழிறங்குகிறது. இத் தூக்காற்றல் சுழலியின் அலகுகள் (Rotor Blades) வளைந்துள்ள கோணத்தையும் (Angle) பொறி (Engine) சுழலிக்குக் கடத்தும் ஆற்றலையும் பொறுத்திருக்கின்றது. அலகுகளின் வளைவுக்கோணமும், பொறியினின்று பெறும் ஆற்றலும் நெருங்கிய தொடர்புள்ளனவாக இருக்கவேண்டும் அஃதாவது, அலகுகளின் வளைவுக்கோணம் உயர்ந்தால் பொறி சுழலியை இயக்க மிகுதியான ஆற்றலைக் கடத்த வேண்டும்.

''திருகிறக்கை ஊர்தி''யின் இன்றிமையாத, பகுதி ஊர்தியின் மேலே கிடை மட்டமாக (Horizontal) பொருத்தப்பட்டுள்ள ''காற்றுத்திருகு' எனக் குறிப்பிடப்பெறும் சுழலி (Rotor) ஆகும். இச்சுழலிக்கு இரண்டு முதல் நான்கு வரையிலும், சில போது அதற்கு மேற்பட்டும் அலகுகள் உண்டு. இவ்வலகுகள் நீண்ட இறக்கைகளாக இருக்கின்றன. சுழலியைச் சாய்ப்பதற்கேற்ப முன்புறமோ, பின்புறமோ, வலப்புறமோ, இடப்புறமோ ஊர்தியைச் செலுத்த முடிகிறது.

கண்டுபிடித்தோர்: முதன் முதலில் 1500இல் இத்தாலி நாட்டைச் சேர்ந்த ''இலியானுர்தோ தா வின்சி'' (Leonardo da Vinci) திருகிறக்கை ஊர்தி ஒன்றை அமைத்தார். ஆனால் பொறி (Engine) இல்லாததால் அவ்வகை ஊர்தி பயன்படவில்லை. 1910இல் 'ஐகர் சிக்கார்சுகி'' (Igor Sikorsky) என்னும் வானூர்தி அமைக்கும் வல்லுநர், ஆள் செல்ல முடியாத திருகிறக்கை ஊர்தியைச் செய்தார். 1939இல் செருமனியைச் சேர்ந்த இரால்சு (Rohlfs) என்பார் 11700 அடி உயரம்வரை திருகிறக்கை ஊர்தியில் சென்றார். பின்னர் 1941இல் ''ஐகர் சிக்கார்சுகி'' தமது திருகிறக்கை ஊர்தியை வானில் $92\frac{1}{2}$ நிமைய நேரம் நிலையாக நிறுத்திக் காட்டினர். இரண்டாம் உலகப் போரின்போது மணிக்கு 125 கல் தொலைவு செல்லும் திருகிறக்கை ஊர்திகள் பயன்படுத்தப்பட்டன. பின்னர் மணிக்கு 150 கல் தொலைவு செல்லும் திருகிறக்கை ஊர்திகளும் செய்யப்பட்டன.

பயன்கள்: திருகிறக்கை ஊர்திகள் எங்கும் செல்லக்கூடியவையாய் இருக்கின்றன. மலையின் மேலும், வெள்ளப் பரப்புப் பகுதிகளுக்கும் நிலநடுக்கத்திற்காளான பகுதிகளுக்கும் செல்லப் பயன்படுகின்றன. இவ்விடங்களுக்கெல்லாம் ஏனைய வகை வானூர்திகள் செல்லலாமெனினும் திருகிறக்கை ஊர்தியால் இரு பெரும் பயன்களைப்பெற முடிகின்றது. ஓரிடத்தின் மேலாகத் தாழ்ந்து செல்வதும், சிறிய இடத்திலும் இறங்குவதுமே அவ்விரு பயன்களாகும். இக்காரணம் பற்றியே நில அளவைக்கும் (Land Surveying), காயமுற்றவர்களையும் நோய்ப்பட்டவர்களையும் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லவும், பயிர்களுக்குப்'பூச்சிக்கொல்லி' மருந்தடிக்கவும்,தனிப்படுத்தப்பட்ட பகுதிகளுக்குத் தேவைப் பொருள்களை எடுத்துச் செல்லவும், காடுகளில் தீ யேதத்தைத்தடுப்பதற்கும்பிறவற்றிற்குமான ஆய்வுகளுக்கும், இன்னும் இவைபோன்ற பலவற்றிற்கும் திருகிறக்கை ஊர்திகள் பயன்படுத்தப்பெறுகின்றன.

குறைகள்: திருகிறக்கை ஊர்திகள் விலையுயர்ந்தவையாயிருப்பதோடு கவனத்துடன் வைத்துப் பேணவேண்டியவையாயிருக்கின்றன. ஒரே அளவு எடையை எடுத்துச் செல்ல, பிற வானூர்திகளைவிட மிகுதியான ஆற்றலுடைய பொறிகள் (Engines)திருகிறக்கை ஊர்திகளுக்குத்தேவைப்படுகின்றன. அஃதாவது திருகிறக்கை ஊர்திகளுக்கு மிகுதியாக எரிபொருள் (Fuel) பயன்படுத்தப்படுகின்றது. திருகிறக்கை ஊர்திகள்பிற வானூர்திகளைவிடக் குறைந்த உயரமே செல்லக்கூடியவையாயிருப்பதோடு, பிறவற்றைவிடக் குறைந்த விரைவும் மிகுந்த இரைச்சலும் கொண்டவையாயிருக்கின்றன.

முடிவுரை: மேற்கூறியவை போன்ற குறைகள் இருப்பினும் திருகிறக்கை ஊர்திகள் மிகப் பயனுள்ளவை என மெய்ப்பித்துக் காட்டியுள்ளன. நாட்டில் கிளர்ச்சி மிகுந்த பகுதிகளுக்கு உந்துகளால் செல்ல வியலாதபோது திருகிறக்கை ஊர்திகள் ஆட்சியாளர்க்குப் பயன்படுவதைச் செய்திகள் வாயிலாய் அறிகிறோம். O

மொழியாக்கம்-ஒரு விளக்கம்

(விளங்கியல்)

"செங்குட்டுவன்"

செஞ்ஞா யிற்றுச் செலவுமஞ் ஞாயிற்றுப்
பரிப்பும் பரிப்புச் சூழ்ந்த மண்டிலமும்
வளிதிரிதரு திசையும்
வறிது நிலைஇய காயமும் என்றிவை
சென்றளந் தறிந்தோர் போல வென்றும்
இனைத்தென் போரும் உளரே![1]-

சூரியனின் ஈர்ப்பாற்றலால் உலகம் (உல்+அகம்; உருள்வது) முதலான மண்டிலக் கோள்கள் இயங்குகின்றன வென்றும், வளியை யும் வெற்றிடத்தையும் கொண்ட வான்மண்டிலம் உள்ளதென்றும், ஈராயிரம் யாண்டுகட்கு முன் தெளிவாகக் கணக்கிட்ட தமிழர் மொழி யில்-தொன்மை, முன்மை, எண்மை, ஒண்மை, இளமை, வளமை, தாய்மை, தூய்மை, செம்மை, மும்மை, இனிமை, தனிமை, பெருமை, திருமை, இயன்மை, வியன்மை ஆகிய பதினாறு சிறப்புகளையும் ஒருங்கேயுடைய[2] நம்மன்னைத் தமிழில் அறிவியற் கல்வியைப் புகட்ட வியலாது எனக் கூறினர் கரவோர். உலகின் முதல் தாய்மொழியான தமிழிலிருந்து கிளைத்த ஏனைய மொழிகள் சிறக்க வளர்ந்து பெருகியும், தமிழனின் மொழியடிமைத்தன்மையால் தமிழ் தன்னிலையிற் றாழ்ந்ததே யன்றி மேம்பாடடைய வில்லை. இருப்பினும், இவ்விருபதாம் நூற்றாண் டில் மறைமலையடிகள் கொளுத்திய தனித்தமிழ்ப் பற்றெனும் வேட் கைத் தீச்சுடர் பற்றிப் பரவத் தொடங்கியுள்ளது கண்டு அறிஞர்கள் ஆறுதலடைகின்றனர்.

ஆங்கில மொழியிலிருந்து அறிவியலைத் தமிழ்ப்படுத்த முனைந்த வர்கள் எலிக்கு அஞ்சிப் புலிவாயில் விழுந்ததைப்போல் கலைச் சொற்கள் பலவற்றை வடசொற்களாகவே வரைந்து வைத்தனர். அவற்றை விலக்கித் தவத்திரு மறைமலையடிகளின் வழியில் நற்றமிழ்ச் சொற்களைப் பயன்படுத்த விழைந்த தமிழ்ப் பயிற்றுமொழி யாசிரியர் களை நோக்கி வடமொழிக் கணக்கர் தூய தனித்தமிழில் மொழியாக்கம் செய்வது தீமையே பயக்கும் எனப் புகன்றார். மின்சார ஜனனி (Electric generator) மின்னாக்கி யாக்குவதில் அவர்க்கு வயிற்றெரிச்சல்!

1. புறம் 30; 2. தமிழ்வரலாறு (பாவாணர்) முகவுரை.

மறைமலையடிகளின் தமிழ்த்தாயைப் பாடமாக வைக்கக்கூடாது எனக் கூச்சலிடும் கும்பலைச் சேர்ந்தவர் அல்லரா, அவர்!

அடுத்து, அறிவியலைத் தமிழ்ப்படுத்துவதில் தமிழ்நாட்டில் 'தென்மொழி' 'கலைக்கதிர்' போன்ற திங்களிதழ்கள் சிறந்த கடமை யாற்றுங்கால் தமிழ்ச்சா கடிப்புச் செய்வதையே நாட்கடனாகக்கொண்ட இதழொன்று மணியாகத் தமிழ் வளர்க்கிறது என்று கூறுகிறார் தமிழ் பயின்றவரொருவர். பயிற்றுமொழி வகுப்பைத் தொடங்கிய துணை வேந்தரோ ஆங்கிலச் சொல்லை எழுத்துக் கெழுத்து பெயர்த்துப் பயன்படுத்துமாறு கூறினர். இப்படிப்பட்ட இடர்ப்பாடுகளுக் கிடையேயும் தவத்திரு மறைமலையடிகளைப் பின்பற்றும் ஆசிரியன்மார் இல்லாமலில்லை. அவ்வத்துறையில் முறைபோகிய அவர்களுட் பலருக் குச் சீரிய தமிழ்ப்புலமை யில்லாததால் சொற்களைத் தொகுப்பதில் காலத் தாழ்த்தமாகிறது. எனினும் அவர் தம் தனித்தமிழார்வமும் பணியும் பெரிதும் போற்றற்குரியனவாம்.

பொருளியல் எனப்படும் விளங்கியற் சொற்களை மொழியாக்கம் செய்யுங்கால் அடையும் இடர்ப்பாட்டைச் சிறப்பாக எடுத்துக்கூறி அதனைக் களைவதே இக்கட்டுரையின் நோக்கம்.

வேகம், செலவு என்பனவற்றின் சொல்லாட்சி

மொழியாக்க ஆசிரியர்கள் வேகம் என்ற சொல்லின் முழுப் பொருளை யறிந்தாரிலர். வேகத்தை விளக்கப் புகுந்த மொழிநூற் பெரும் புலவர், "இயங்கும் பொருள் ஒன்றாயினும் பலவாயினும் ஒன் றைவிட இன்னொன்றும் ஒரு செலவைவிட இன்னொரு செலவும் முன் செல்வதே வேகம்" எனவும் அஃது "ஒருவினை செய்தற்கண் ஒரு குறிப் பிட்ட காலத்துக்குரிய வினை விழுக்காட்டையும் குறிக்கும்" எனவும் கூறுகின்றார்[3]. ஆகையால் 'Relative Velocity' என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச்சொல் "வேகம்" என்பதே. அங்ஙனமே Velocity) என்ற சொல்லுக்குச் "செலவு" என்பதே. இவற்றைவிடுத்து நேர்க்கோட்டுவேகம் (Velocity) ஒப்புநேர்க்கோட்டுவேகம் (Relative Velocity) எனக் கூறுவது பிழையாமென்க. இங்ஙனமே தபுசெலவு[4]. (Escape Velocity) என்பதைத் தப்பியோடும் நேர்க்கோட்டு வேகம் எனக்கூறலாமா?.

---

3. முதல் தாய்மொழி (பாவாணர்) ப. 60.
4. குணகடற்றிரையது பறை தபு நாரை-குறுந்தொகை.

செலவு முதலியவற்றின் இலக்கணம் (வரையறை) கூறுங்கால் கீழ்க்கண்டவாறு நூற்பா வடிவிலேயே கூறலாம்.

செலவே தானே இடம்பெயர் அளவே;[5]
தொடங்கிய செலவின் மாற்ற அளவே
முடுக்கம் ஒடுக்கம் எனவிரு வகைத்தே![6]
செலவு மிகைப்படின் முடுக்கம்; குறையின்
ஒடுக்க மென்ப ரியங்கிய லறிஞர்[7].

Acceleration, deceleration என்ற சொற்களுக்கு முடுக்கம், ஒடுக்கம் என்னும் சொற்களைத் தவிர நீண்ட சொற் கோவைகளைப் பயன்படுத்தவேண்டியதில்லை.

வடசொல்லாட்சி:

பன்னூற்றாண்டுக்காலமாகத் தமிழை அடிமைப்படுத்த முயன்ற வடசொற்கள் இன்னும் நீங்கியபாடில்லை. எண்மத் (Octave)தை அட்டம சுரமென்றும், சுர ஓர்மை (tune)யைச் சுர ஐக்கியமென்றும் மாழை (பொன்மம்)களை உலோகம் என்றும் நீரம் அன்றி நீர்மத்தைத் திரவமென்றும் இதளைப் பாதரசம் என்றும் இதட்பி (Amalgamate) என்பதை இரசக்கலவையிடு என்றும் கூறுவது தேவையற்றது. நீர நிலையியலை, (Hydrostatics) திரவ நிலையியலெனவும் கூறல் வேண்டா.

அரங்கம், அரத்தம் போன்ற நற்றமிழ்ச் சொற்கள் வடமொழியில் ரங்கம், ரத்தமாகித் திரும்பத் தமிழுக்கு வரும்போது, தொடர்பில்லா வடசொற்கள் போன்று இரங்கம், இரத்தமான தொப்பச் சூழ்ச்சியகத்தைக் குறிக்கும் எந்திரம் (Engine) என்ற சொல் இயந்திரமாயிற்றுப் போலும்! 'சுள்ளென்றெரிக்கும் சுடரோ'னை சூரியன் என்ற நேரிய தமிழ்ச்சொல்லை வடசொல்லென மயங்கிச் சூரிய நாளை (Solar day) ஞாயிற்றுநாள் எனக் கூறவேண்டியதில்லை.

---

5. Velocity is the rate of Displacement
6. Acceleration is the rate of Change of Velocity
7. Acceleration × Retardation
   இயங்கியல்-Dynamics

சொற்றிரிபு:

பரமேசுவரன் (ParamesWaran) என்பார் செய்த அழுத்தக் கரு வியை ஆங்கிலத்தில் வாரன் கருவியெனக் கூறுகின்றனர். அதனைத் தமிழுக்கு மாற்றுங்கால் பரமேசுவரன் கருவியென்றோ அன்றி வரனின் கருவியென்றோ மாற்றாமல் வாரன் கருவியென வெழுதுதல், செவ்வந்தி சா + மந்தியானாற் போன்றதாகும்[8].

சொற்பெயர்ப்பு:

வேற்று மொழிச் சொற்களைப் பெயர்க்கும் (Transliteration) போது தமிழ்முறைப்படிதான் பெயர்க்கவேண்டும். இந்நெறியிற் பிறழ்ந்த காரணியத்தால் சேரன் தமிழ் மலையாளமாகவும், எருமையூரன் தமிழ் கன்னடமாகவும், வேங்கடத் தமிழ் தெலுங்காகவும் பிரிந்து தமிழின் விரிவையும் பெருமையையும் குறைத்துவிட்டதைக் காண்மின்! (Scandium) என்பதைச் சுகாந்தியம் என்றோ, அன்றிக் கந்தியம் எனவோதான் பெயர்க்கவேண்டுமேயன்றி, 'ஸ்கேண்டியம்' எனலாகாது.

சொற் சுருக்கம்:

முளை (Pivot)யைச் சுழற்சித்தான மென்றோ கனச்சுழலி (Fly wheel)யைச் சுழல் கனச்சக்கரம் என்றோ நகரளவியை (Slide calipers) நழுவிடுக்கி யளவுகோல் என்றோ கொடுமட்டத்தைக் (Donor-level) கொடையாளி மட்டமென்றோ (கால) ஓர்மையைக் (Synchronisation) கால ஒருமைப் பாடென்றோ இணைக்கி (Collimator)யை இணைப்படுத்தி யென்றோ, மின் இயைதிறன் அல்லது இயைபெண்ணைக் (Valency) கூடுகையெண் வலுவளவு என்றோ பாய்மத்தைப் பாய்பொருள் என்றோ சிலசொற்களிருக்கப் பல சொற்களைக் கொள்ளல் வேண்டா. நீட்சிக்குணகம் (Coefficient of linear expansion), தற்பெருகற் குணகம் [Coefficient of absolute expansion (of Volume] சார்பெருகற் குணகம் (Coefficient of apparent expansion) எனச் சுருங்கிய சொற்கோவையால் விளக்கும் சொற்றிறம் நிரம்பிய தமிழில் மொழியாக்குங்கால், நீளவிரிவுப் பெருகெண் என்றும் தனி விரிவுப் பெருகெண் என்றும் ஆங்கில வழியிலேயே பெருக்க வேண்டியதில்லை. குவியம் என்ற ஒரு சொல்லையே (Focus, Focal point) என்ற இரண்டு ஆங்கிலச் சொற்களுக்கும் பயன்படுத்தலாம்.

8. செவ்வந்தி – சேவந்தி – சேமந்தி–சாமந்தி–ஜாமந்தி–சா + மந்தி: இந்தியால் தமிழ் எவ்வாறு கெடும்–ப.23.

இடமறிந்தாளல்:

திறன் என்ற சொல் அஃதாளப்படும் இடத்தைப் பொறுத்து (Power, Efficiency) என்ற சொற்களுக்கு மாறாக இடம் பெறும். வானியல் தொலைநோக்கி (Astronomical telescope)யை 'வானோக்கி'யெனக் கூறுவதால் பொருட் சிறப்புக் கெடுமாறில்லை. மாறிலி, எண் (Constant) என்ற இரு சொற்களை இடமறிந்தாள வேண்டும். மிகப் பெரும்பாலான விடங்களில் எண் என்ற சொல்லையே யாளலாம்; தவறேதுமில்லை.

நிறை (Mass) என்ற சொல்லுக்கும் எடை (Weight) என்ற சொல்லுக்குமுள்ள வேறுபாட்டை யாவரும் அறிவர். இவ்விரு சொற்களும் அவற்றுக்கான ஆங்கிலச் சொற்களைவிட முழுப்பொருள் குறித்த நயத்தை ஓர்க! சிறப்புப் பொருள் குறிக்கும் இடங்களைத் தவிர மற்ற இடங்களில் நிறை யென்ற சொல்லுக்கு மாறாகப் பொருண்மை யென்றசொல்லைப் பயன்படுத்த வேண்டியதில்லை.

தமிழ்ச் சொற்களைப் பழக்கத்துக்குக் கொணரல்:

செந்தாங்கி (Upright Stand) எனக் கூறுதல் செம்மையுடைத்தே முரலுதலைத் (Reverberation) தெறிப்பொலி யென்றும் ஊங்காரஒலியை (Humming sound) 'அம்' ஒலியென்றும் கூறுவதைத் தவிர்க்கலாம.

மின்னி (Electron) அயக்காந்தம் (Ferro magnet), விண் (வரு) கதிர் (Cosmic rays) மின்காட்டி (Electroscope) மீநிறையணு (Isotope), கணக்கி (Computer), கதிரவாற்றல் (Radiant energy), மிகுமின்னணு (Ions) முதலிய சொற்களைப் பழக்கத்துக்குக் கொணரலாம். மீக்குற்றலை மின்காந்தக் கதிர்களைப் புதிர்க் கதிர்கள் என்றோ, அன்றி மீமிக் கதிர்களென்றோ குறிப்பிடலாம். தலைபேசியையும் (Head phone) காதுபேசி (?Earphone) யையும் செவிப்பான் என்று குறிப்பிடுவதால் தவறில்லை. பருமம் என்ற சொல்லையும் கொண்மை (Capacity) யென்ற சொல்லையும் கன அளவுக்கு(Volume) மாறாக இடமறிந்து பயன்படுத்தலாம். தங்க இலை மின்காட்டியை (Gold leaf electroscope) விடப் பொன்னிதழ் மின்காட்டி நன்றாக உள்ளது.

அகாரமென்றும் இகாரமென்றும் உகாரமென்றும் அந்நாளில் அறிவர் பலர் சொல்லிப் போந்த மந்திரமான சுட்டெழுத்துகளைக் கொண்டு அகரக்கதிர் (A rays) இகரக்கதிர் (B rays) கரக்கதிர் (C rays) எனக்கூறுதல் எவ்வளவு பொருட்செறிவுடையதா யுள்ளது, பார்மின்!

வேண்டாச்சொல்:

[இடமாறு] தோற்றப்பிழை (Parallox error) இசையொலி [த் தனி]ப் பண்புகள் (Characteristics of musical notes) கூட்டுக்குரல் [ஓசை] (Combination Tones) கடத்துத்திறன் [அளவு] மானி (Conductivity gauges) புவிஈர்ப்பு [விசை]ப்புலம் (Gravitational field), கனல்[ஒளி] (Glow), மீ[மின்] அழுத்த மின் [கல] அடுக்கு (High tension battery) வெப்ப [ஏற்பு]த்திறன் (Thermal capacity) ஆகிய சொற்கோவைகளுள் இரட்டையடைப்புகளுக்குள் உள்ள சொற்களின்றியே தெளிவான பொருள் பெறுவதால் அச்சொற்களை நீக்கிவிடலாம். உருளையை (Cylinder) நீளுருளை எனக் கூறவேண்டா. (கூனைக்கயிறு செல்லும்) கமலைவண்டிபோல் தட்டையானது உருளை என நினைத்தல் தவறு. சக்கர வடிவில் உள்ளவை வண்டியென்று பெயர்பெறும். சிற்றூர்களில் கொடுக்குக் கயிறு செல்லும் கட்டைக்குத்தான் உருளையென்று பெயர்.

வேதியல் மூலகங்களைப் பொறுத்தவரையில் திருச்சிராப்பள்ளி பெரியார் கல்லூரியின் 1968ஆம் ஆண்டு மலரில் வெளியான ' தனிமப் பட்டியல்'' என்னும் கட்டுரையிலுள்ள மொழியாக்கச் சொற்களைச் சிற்சில திருத்தங்களுடன் நாம் ஏற்றுக்கொள்ளலாம். எண்களைக் குறிக்கும்போது பழந்தமிழெண்களின் (௧, ௨, ௩, ௪, ௫ ...) இற்றை வடிவமான 1, 2, 3, 4, 5... ஆகிய எண்களைப் பயன்படுத்துவதில் தடையில்லை.

நமது குறைபாடு:

நற்றமிழ்ச் சொற்களை எடுத்துக்கூறினாலும் அவற்றை வழக்கில் கொணராத குற்றம் நம்மைச்சாரும். மேற்கோளாக எட்டாண்டுகட்கு முன்பே பிர(ற!)சவவிடுதி (Maternity Home) என்பதை விடுத்து ஈனில்[9] என்ற தேனினுமினிய சொல்லைப் பயன்படுத்துமாறு அறிஞர் சிலர் கூறியும் நம்மவர் இன்னும் 'சவ'மாகத்தானே உள்ளனர்!

9. ஈனிலிழையியா-குறுந்தொகை.

தமிழாக்கச் சொற்களில் விரிவஞ்சிச் சிலவற்றை மட்டும் எடுத்துக் காட்டியுள்ளேன். ஈண்டுக் குறிப்பிட்ட முறையில் மறைமலை யடிகள், பாவாணர்தம் வழியில் மொழியாக்கப் புகுந்தால் ஓராண்டுக்குள்ளாகப் பட்டப் பின் படிப்பையே தூய தனித்தமிழிற் பயிற்றுவிக்கலாம். இதனைக்கண்டு பொறாத நம்மவர் சிலர் தமது தமிழறியாமையால் ஆங்கிலச் சொற்களின் முழுப் பொருளையும் தமிழ்ச் சொற்கள் தருகின்றனவா எனக் கேட்கின்றனர். பலவிடங்களில் ஆங்கிலச் சொற்களைவிடத் தமிழ்ச்சொற்கள் பொருளுடன் மிக்க ஒன்றியைந்தனவாயுள்ளன. ஆகையால் தமிழிற் குறைபாடில்லையென்றும் தமிழனிடம்தான் குறைபாடுள்ளதென்றும் உய்த்துணர்மின்!

இச் சொற்களைக் கொண்டு பாடம்நடத்த வியலுமாவெனத் தடைகிளத்துபவர் உலக நெறி யறியாரெனக் கொள்க. புதுமுக வகுப்புக்கு முதற்பாடமான அடிப்படை யலகுகளும் சார்பலகுகளும் (Fundamental and derived units) என்னும் பகுதியில் வரும் கீழ்க்குறித்த நூற்பா நுவலும் பொருள் செறிவுடையதா யில்லையா?

அளவியி னுதவியால் அளக்குமீ நுண்ணிய
நெட்டன வென்னப் பட்டதே நுண்ணியம்[10]
நுண்ணியந் தானே,
வெருனியர் அளவியில் முதற்கோற் பிரிவு
வெருனியர் பிரிவுதம் வேறுபா டேயாம[11]
திருகு மாணியில் புரியிடைத் தொலைவைத்
தலைக்கோல் எண்ணால் வகுக்கக் கிடைக்கும்[12]

10. Least count of a measuring instrument is the smallest length that can be accurately measured with it.

11, 12 In the case of a vernier calipers it is the difference between one main scale and one vernier divisions. In a screwguage it is the distance moved for one division on the Head scale; i. e L. C = $\frac{\text{Pitch}}{\text{No. of Head scale divisions}}$

புரளும்! துன்ப வெயிலில் துவண்டு போகாமல் இன்ப நிழலில் இளைப் பாறும்! எனவே நண்பர்கள் எல்லாம் தென்மொழி, தமிழ்ச்சிட்டு காலம் கடந்துவரும் உண்மை நிலை அறியாமல் உடல்—உள்ளம் துடித்துத் துன்புற்றுப்போகும் அதே நிலையில் உயிர்த்துடிப்பு கொண்டு ஓயா இடியென, ஒழியா மழையென அவற்றின் அன்பு ஆசிரியர் துன்ப நெருப்பில் துடிதுடித்து நடக்கிறார் என்பதை அறிந்து கொள்வா ராக. செத்துக் கொண்டுள்ள யானையை உண்மையிலேயே காப் பாற்ற வேண்டி இன்னலுடன் இழுத்துக் கொண்டு செல்லும் ஓர் எறும்பின் நிலையே 'தென்மொழி'யின் நிலை என்பதை ஒவ்வொரு மாந்த உள்ளமும் உயிரும் உணர்ந்து கொள்ளுமாக.

—அருள்மணி, பெங்களூர்—21, (9-9-68)

அன்புடையீர்! தங்களின் தனித்தமிழ்த்திங்களிதழைப் படிக்கும் வாய்ப்பு, தமிழகத்தைவிட்டு நெடுந்தொலைவில் பணியாற்றும் எனக்கு மூன்று மாதங்கட்கு முன்னர்தான் கிடைக்கப்பெற்றேன். அதனைத் தொடர்ந்து அதற்கு முந்திய இதழ்கள் முதல் கடந்தமாத இதழ்வரை எல்லாவற்றையும் படித்தேன். தங்களின் அருந்தமிழ் நடைகண்டும், நல்ல நடையை வளர்க்க எடுத்துக் கொண்டிருக்கும் முயற்சி கண்டும் மகிழ்கிறேன்; வாழ்த்துகிறேன். தாங்கள் சாதி, சமய வேறுபாடற்ற குமுகாயத்தை உருவாக்கும் பணியில் ஈடுபட் டிருக்கின்றீர்கள் எனில் ''பிராமணர்—அல்லாதார்'' என்ற பாகுபாடு காணுதீர்கள். பிராமணர்களும் தமிழர்களாய்த் தமிழ்நாட்டில் பிறந்த வர்களே! அவர்களை அளவுக்கு மிஞ்சியும் திட்டாதீர்கள். அதோடு மட்டுமன்றித் தாங்கள் அரசியல் தலைவர்களைத் திட்டும்போது அதற்குமேலும் ஒருபடிகடந்து 'வேண்டாத கடுஞ்சொல் கொண்டு' தாக்குகின்றீர்கள். குமுகாயத்தின் ஒரு பகுதியினரையும் நாவினால் சுடாமல் நடுநின்று 'இதுநம் கொள்கை'' என எடுத்துரைப்பீர்க ளாயின், அவ்வினத்தவரில் நற்றமிழ்ப் பற்றுக்கொண்ட நல்லவரின் உள்ளமும் மகிழும்; அல்லாதவரையும் நம்பால் நம் முழைப்புக்கு நல்லாக்கம் தேடிக்கொள்ளும் வகையில் ஈர்த்துக் கொண்டவர்களாவோம். தங்கள் நற்றமிழ்ப் பணி சிறக்க என்றும் விழைகிறேன்.

—மு. க சண்முகநாதன், பஞ்சாப் பல்கலைக்கழகம்,
சண்டிகார். (10-8-68)

தமிழ்ப் பெரும் பாவல! தலைவணங்குகின்றேன். 'தென்மொழி அன்பர்களுக்குள்' பல்வேறுபட்ட கருத்து வேற்றுமைகள் இருப்பி னும், 'மொழி' என்று எண்ணும்போது அவையனைத்தையும் ஒதுக்கி விட்டு ஒன்றுபடுகின்றோம். அத்தகையோரில் யானும் ஒருவன். 'ஓ! ஓ! திரைப்படக்காரரே!'—ஆசிரியப் பாடல் அருமை! அருமையிலும் அருமை! ''உளத்தைக் 'கல்'வது கலையென உரைக்க''! என்ற கலைக் கான விளக்கம் மிக நன்று.

—பெ. க. மு. வெற்றிக்கூத்தன், தொலைபேசித்துறை, நெய்வேலி—1.

வணக்கம். தென்மொழியைத் தொடர்ந்து படித்து வருவோரில் யானும் ஒருவன். அதில் வரும் ஆசிரிய வுரைகளும், புலவர்களின் குமுகாயச் சீர்திருத்தப் பாடல்களும் என்னைப் பெரிதும் கவர்ந்துள் ளன. கருத்தாழமும் கொண்டிருப்பதால், படிக்குந்தோறும் மிக்க ஆவலைத் தூண்டுகின்றன; தன்மானமுள்ள ஒவ்வொரு தமிழனையும் தட்டி எழுப்புவனவாக உள்ளன. தென்மொழி பீடுநடையுடன் மேன்மேலும் ஒளிபெற்றுப் புகழுடன் திகழ எனது பாராட்டுகள்.

—பி. தங்கவேலு-கே. ஆர். மொகல்லா, மைசூர்.

மொழிப் பேரறிஞர்

ஞா. தேவநேயப் பாவாணர் அவர்களின்

அண்மை வெளியீடுகள்! அரிய ஆராய்ச்சி நூற்கள்!!

THE PRIMARY CLASSICAL LANGUAGE OF THE WORLD (ஆங்கிலம்)	உருபா 25-00
தமிழ் வரலாறு	உரு 6-25
வடமொழி வரலாறு	உரு 7-50
பண்டைத்தமிழ்நாகரிகமும் பண்பாடும்	உரு 6-25
இசைத்தமிழ்க் கலம்பகம்	உரு 3-00
இந்தியால் தமிழ் எவ்வாறு கெடும்?	உரு 1-00

0 தென்மொழியன்பர் ஒவ்வொருவர் கைகளிலும் மிளிரவேண்டிய அரிய நூற்கள்!

உடனே வாங்கிப் படியுங்கள்.

அஞ்சல் கட்டணம் தனி.

கிடைக்குமிடங்கள்:-

திரு. தே. மணி.
ஆ. 1135, இரண்டாம் மேற்குக் குறுக்குச்சாலை,
காட்டுப்பாடி விரிவு. (வ. ஆ.)

செயலாளர்:
மறைமலையடிகள் மன்றம்,
புன்செய்ப் புளியம்பட்டி, ஈரோடு வழி.

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.